Registered as a News paper in Sri Lanka

பக்கங்கள்: 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | பிரமோதூத ஹூ சித்திரை மீ 17ஆம் உ | திங்கட்கிழமை | (30 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷவ்வா 3 | ஓசை 71

## ஒரிஸா சென்றவர்கள் மண்டபம் முகாமில் இடம் பிடிக்க முயற்சி

(இராமேஸ்வரம்)

ஒரிஸா அகதி முகாமில் இருந்து தப்பியோடிவரும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் இராமேஸ்வரம் வரத் தொடங்கியுள்ளனர். இவர்கள் மண்டபம் அகதி முகாமில் தங்களைப் பதிவு செய்து கொள்வதற்கு மண்டபம் மறுவாழ்வு அதிகாரிகளின் உதவியை நாடியுள்ளனர். இவர்கள் ஒரிஸாவில் இருந்து பஸ்கள் மூலம் தமிழ் நாடு வருகின்றனர்.

ஆனால் ஒரிஸாவில் இருந்து தப்பியோடி வருவோரை முகாமில் தங்க வைக்க வேண்டாம் என அதிகாரிகளை தமிழ்நாட்டு அரசாங்கம் கேட்டுள்ளது. இதனால் இவர்களை முகாமில் சேர்த்துக் கொள்ள அதிகாரிகள் மறுத்துவிடுகின்றனர்.

இதனால் ஒரிஸாவில் இருந்து தப்பியோடி ( 6 ஆம் பக்கம் பார்க்க )

# படைகளின் துன்பம் போதும்; தமிழக மீனவரும் துன்புறுத்த வேண்டாம்

## விபத்தில் இளம் பெண் மரணம்

(சாவகச்சேரி)

நுணாவிலில் நேற்று முன் தினம் ஏற்பட்ட வாகன விபத்தில் 18 வயது மதிக்கத்தக்க இளம் பெண் காலமானார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை சுமார் 4 மணியளவில் நுணாவிலில் இவ் விபத்து நடந்தது. விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான வாகனமொன்றும் மோட்டார் சைக்கிளும் மோதியதால் இவ் விபத்து ஏற்பட்டதாம்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் மே தினம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இம்முறை மேதின கொண்டாட்டங்கள் சிறப்பாக நடைபெறவுள்ளன கலை கலாசாரங்களை பிரதிபலிக்கும் ஊர்வலங்கள் இதில் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்வார்கள்

## கிராமோதய சபை புதிய தலைவர்

(கல்லாறு)

பெரியகல்லாறு இரண்டாம் வட்டாரத்திற்கான கிராமோதையசபைத் தலைவராக ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் திரு எஸ். சபாரெத்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (45)

## செட்டிகுளத்தில் தேனிசைச் செல்லப்பா

(வவுனியா)

தேனிசை செல்லப்பாவும்

## தமிழீழ மீனவர் நிலைபற்றி மக்கள் முன்னணி அறிக்கை

இலங்கைப் படையினராலும் பின்னர் இந்தியப் படையினராலும் தொழில் செய்ய முடியாமல் தடுத்துத் துன்புறுத்தப்பட்ட தமிழீழ கடற்றொழிலாளர் இப்பொழுது தமிழக மீனவ சகோதரர்களாலும் துன்புறுத்தப் படுவது நிறுத்தப்பட வேண்டும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தமிழக மீனவர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கேட்டுள்ளது. அந்த அறிக்கை வருமாறு:

தமிழ் நாட்டு மீனவர்கள் தமிழீழ எல்லைக்குள் வந்து இங்குள்ள மீனவர்களின் மீன் வலையை அறுத்துச் செல்கிறார்கள். மீன்களை களவாடிச் செல்கின்றார்கள்.

பலமுறை நாம் இம் மீனவர்களை அழைத்து இங்குள்ள மீனவர்கள் படும் கஷ்டத்தை எடுத்து விளக்கி இப்படியான செயல்களில் ஈடுபட வேண்டாமென கேட்டோம்.

ஆனால் அவர்கள் எமது வேண்டுகோளை மதியாது தொடர்ந்தும் மீன் வலைகளை அறுப்பதிலும் மீன்களை களவாடிச் செல்லுவதிலும் ஈடுபட்டு வந்தார்கள்.

இன்றும் மீன் வலைகளை அறுப்பதும், களவாடுவதும் தொடர்கின்றது. அது மட்டுமல்லாமல் எமது மீனவர்கள்

தமிழ் நாட்டில் எதிர்க்கட்சிகள் கூச்சலிடுவது போல நாம் யாரையும் இந்திய எல்லைக்குள் வந்து கூட்டிச்செல்லவில்லை.

தமிழீழ மீனவர்கள் 83 ஆம் ஆண்டு தொடக்கம் மீன் பிடிக்க முடியாமல் தடுக்கப்பட்டார்கள். தடையை மீறி மீன் பிடிக்கச் சென்ற பலர் சிறிலங்கா கடற்படையால் சுடப்பட்டு இறந்துள்ளனர். 87 ஆம் ஆண்டு இந்தியப்படை வந்த பின்பு மீனவர்கள் முழுமையாக மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்டார்கள். சுடப்பட்டார்கள்.

இன்று ஏழு ஆண்டுகளின் பின் தமிழீழ மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றார்கள். வங்கியிலும் மற்றும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழப்பு நஷ்ட ஈடுபெற 236 சான்றிதழ்களில் மோசடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயங்கரவாத சம்பவ உயிரிழப்பு நஷ்டஈடு பெறுவதற்காக 236 இறப்பு சான்றிதழ்

பதிவாளர்அலுவலக கிரிசீலனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இத்தசவலை காணி பதிவாளரும் இணைமாவட்ட பதிவாளருமான திரு. எஸ். முத்

## பனம் பொருள் அபிவிருத்திக்கு 6லட்சம் டாலர் உதவி

(கொழும்பு)

பனம்பொருள் உற்பத்தித் தொழிலைஅபிவிருத்தி செய்ய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டப் பிரிவு ஆறு லட்சம் அமெரிக்க டாலர்களை வழங்கியுள்ளது

## வலிகாமப் பகுதியில் மாபெரும் மேதின ஊர்தி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வலிகாமப் பிரிவு மாபெரும் மேதின ஊர்தி ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்திலிருந்து பி. ப. 2. 00 மணிக்கு ஊர்தி ஊர்வலம் ஆரம்பமாகும்.

இவ்வூர்தி ஊர்வலம் நல்லூர் யாழ்ப்பாணம், கோப்பாய், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

இவ்வூர்தி ஊர்வலம் தெல்லிப்பழையிலிருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி வழியாக வந்து ஆஸ்பத்திரி வீதியூடாகச் சென்று மின்சார நிலைய வீதி வழியாக மத்திய கல்லூரி மைதானத்தை வந்தடையும்.

கூட்டம் பி.பகல் 5. 30 மணியளவில் ஆரம்பமாகும் இம் மே தின வைபவத்தில் சகல தமிழீழ மக்களையும், தொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு வலி

## இறந்துகொண்டிருந்தவர் கையிலிருந்து மோதிரம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில் நச்சுத் திராவகம் அருந்தி இறந்துகொண்டிருந்தவரின் கையிலிருந்த மோதிரம் திருடப்பட்டுள்ளது.

மாங்குளம் மல்லாவியைச் சேர்ந்த சு. நவரட்ணசிங்கம் வயது22 என்பவர் வேலை ஒன்றுக்கும் செல்லாது வீட்டிலேயே இருப்பதையிட்டு தாயாரின் பேச்சைத் தாங்காது மனமுடைந்து "மோனோ குரோட்ட பாஸ்" மருந்தை உட்கொண்டிருந்தார். மோசமான நிலையில் இவர் மல்லாவியிலிருந்து யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டு வெளிநோயாளர் பகுதியில் (OPD) வைக்கப்பட்டிருந்த சமயம் வைத்தியர்கள் பார்வையிடுவதற்கு முன்பு வலியால் துடித்துக் கொண்டிருந்த இவரின் கையிலிருந்த மோதிரத்தை திருடன் ஒருவன் தருணம் பார்த்து திருடி உள்ளான் என யாழ் வைத்திய சாலை பொலீசாரிடம்

இதில் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்வார்கள்

## கிராமோதய சபை புதிய தலைவர்

(கல்லாறு)

பெரியகல்லாறு இரண்டாம் வட்டாரத்திற்கான கிராமோதயசபைத் தலைவராக ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் திரு எஸ். சபாரெத்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (45)

## செட்டிகுளத்தில் தேனிசைச் செல்லப்பா

(வவுனியா)

தேனிசை செல்லப்பாவும் பாடகி சொர்ணலதாவும் கலந்து கொண்டு நிகழ்த்தும் இசை நிகழ்ச்சி இன்று திங்கட்கிழமை மாலை செட்டிகுளம் பாடசாலை மைதானத்தில் நடைபெற உள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை இப்பகுதி விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் மேற்கொண்டுள்ளனர்.

## பிரேமச்சந்திரன் ஒரிஸா பயணம்

(கொழும்பு)

ஈ.பி.ஆர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர் பிரேமச்சந்திரன் இலங்கை அரசுடனான பச்சுவார்த்தை பற்றி பத்மநாபாவுடன் கலந்தாலோசிப்பதற்காக ஒரிஸா சென்றுள்ளார்.

அத்தோடு பிரேமச்சந்திரன் ஒரிஸா புறப்படுவதற்கு முன் ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர் சிலர் இந்திய உயர் ஸ்தானிகரை சந்தித்ததாக கொழும்பில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இச்சந்திப்பின் பின் இந்திய உயர் ஸ்தானிகர் டில்லி சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இடிவிழுந்து பெண் பாதிப்பு

செட்டிகுளம், கற்காரம்குளம் பகுதியில் இடி விழுந்து பதின்மூன்று வயதுப் பெண் ஒருவர் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை (28.04.90) மாலை மழை பெய்து கொண்டிருந்த வேளையில் திடீரென்று விழுந்த இடியினாலேயே மேற்படி பெண் பாதிப்புக்குள்ளானார்.

இவர் சிகிச்சைக்காக செட்டிகுளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

---

வேண்டும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தமிழக மீனவர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் கேட்டுள்ளது. அந்த அறிக்கை வருமாறு:

தமிழ் நாட்டு மீனவர்கள் தமிழீழ எல்லைக்குள் வந்து இங்குள்ள மீனவர்களின் மீன் வலையை அறுத்துச் செல்கிறார்கள். மீன்களை களவாடிச் செல்கின்றார்கள்.

பலமுறை நாம் இம் மீனவர்களை அழைத்து இங்குள்ள மீனவர்கள் படும் கஷ்டத்தை எடுத்து விளக்கி இப்படியான செயல்களில் ஈடுபட வேண்டாமென கேட்டோம்.

ஆனால் அவர்கள் எமது வேண்டுகோளை மதியாது தொடர்ந்தும் மீன் வலைகளை அறுப்பதிலும் மீன்களை களவாடிச் செல்லுவதிலும் ஈடுபட்டு வந்தார்கள்.

இன்றும் மீன் வலைகளை அறுப்பதும், களவாடுவதும் தொடர்கின்றது. அது மட்டுமல்லாமல் எமது மீனவர்கள் கடலில் தாக்கப்படுகின்றார்கள்.

தமிழ் நாட்டில் எதிர்க்கட்சிகள் கூச்சலிடுவது போல நாம் யாரையும் இந்திய எல்லைக்குள் வந்து கூட்டிச்செல்லவில்லை.

தமிழீழ மீனவர்கள் 83 ஆம் ஆண்டு தொடக்கம் மீன் பிடிக்க முடியாமல் தடுக்கப்பட்டார்கள். தடையை மீறி மீன் பிடிக்கச் சென்ற பலர் சிறிலங்கா கடற்படையால் சுடப்பட்டு இறந்துள்ளனர். 87 ஆம் ஆண்டு இந்தியப்படை வந்த பின்பு மீனவர்கள் முழுமையாக மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்டார்கள். சுடப்பட்டார்கள்.

இன்று ஏழு ஆண்டுகளின் பின் தமிழீழ மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றார்கள். வங்கியிலும் மற்றும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழப்பு நஷ்ட ஈடுபெற 236 சான்றிதழ்களில் மோசடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயங்கரவாத சம்பவ உயிரிழப்பு நஷ்டஈடு பெறுவதற்காக 236 இறப்பு சான்றிதழ்களில் திருத்தம் செய்யப்பட்டு மோசடி இடம்பெற்றுள்ளது பதிவாளர்அலுவலக்கூரிசீலனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இத்தசவலை காணி பதிவாளரும் இணைமாவட்ட பதிவாளருமான திரு. எஸ். முத்துக்குமாரன் ஈழநாதத்திற்கு தெரிவித்தார்.

(6ஆம் பக்சம் பார்க்க)

## இறந்துகோண்டிருந்தவர் கையிலிருந்து மோதிரம்திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில் நச்சுத் திராவகம் அருந்தி இறந்துகொண்டிருந்தவரின் கையிலிருந்த மோதிரம் திருடப்பட்டுள்ளது.

மாங்குளம் மல்லாவியைச் சேர்ந்த சு. நவரட்ணசிங்கம் வயது22 என்பவர் வேலை ஒன்றுக்கும் செல்லாது வீட்டிலேயே இருப்பதையிட்டு தாயாரின் பேச்சைத் தாங்காது மனமுடைந்து ''மோனோ குரோட்ட பாஸ்'' மருந்தை உட்கொண்டிருந்தார். மோசமான நிலையில் இவர் மல்லாவியிலிருந்து யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டு வெளிநோயாளர் பகுதியில் (OPD) வைக்கப்பட்டிருந்த சமயம் வைத்தியர்கள் பார்வையிடுவதற்கு முன்பு வலியால் துடித்துக் கொண்டிருந்த இவரின் கையிலிருந்த மோதிரத்தை திருடன் ஒருவன் தருணம் பார்த்து திருடி உள்ளான் என யாழ் வைத்திய சாலை பொலீசாரிடம் நவரட்ணசிங்கத்தின் உறவினர்கள் முறையிட்டனர்.

(லோ)

இவ்வூர்தி ஊர்வலம் நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

இவ்வூர்தி ஊர்வலம் தெல்லிப்பழையிலிருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி வழியாக வந்து ஆஸ்பத்திரி வீதியூடாகச் சென்று மின்சார நிலைய வீதி வழியாக மத்திய கல்லூரி மைதானத்தை வந்தடையும்.

கூட்டம் பி. பகல் 5. 30 மணியளவில் ஆரம்பமாகும் இம் மே தின வைபவத்தில் சகல தமிழீழ மக்களையும், தொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு வலிகாமப் பிரிவு மக்கள் விடுதலை முன்னணியினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

### மே மாத இறுதிக்குள்

## நிர்மாணத்தைப் பூர்த்தி செய்தால் இறுதிக் கோடுப்பனவுகள்

(சுண்டிக்குளி)

1988, 1989 ஆம் ஆண்டுகளில் யாழ்.தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் வீடமைப்புக் கடன், மற்றும் ''செவனசரண'' திட்டத்தின் மூலம் வீடமைப்பு நிவாரணம் பெற்று,இதுவரையில் வீடமைப்பு நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்யாதவர்கள் 1990 மே மாதம் 31 ஆம் திகதிக்குள் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து மிகுதிக் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட திகதிக்குள் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்ய தவறின், மிகுதிக் கொடுப்பனவை இழக்கவேண்டிய சூழ்நிலை தோன்றக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மதிய உணவுக்குப் பதிலாக பாடசாலை முத்திரைகள்

(கொழும்பு)

பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவில் இடம்பெறும் மோசடிகளைத் தடுக்கும் வகையில் புதிய முத்திரைத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது.

வருடாந்தம் ஐநூற்றி நாற்பது ரூபா பெறுமதியுடைய இந்த முத்திரையை மாணவர்கள் பயன்படுத்தி உணவுப் பொருட்களையும் பாடசாலை உபகரணங்களையும் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அடுத்த தவணையிலிருந்து இந்தத் திட்டம் சகல பாடசாலைகளிலும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக கல்வி உயர் கல்வியமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

( 6ஆம் பக்கம் பார்க்க )

## இறந்த, ஊனமுற்றவர்களுக்கு ரூ. 17 லட்சம் நஷ்ட ஈடு

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கைகளினால் உயிரை இழந்தவர்களின் குடும்பங்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் சுமார் 17 லட்சம் ரூபா நஷ்ட ஈடாக வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரினால் கிளிநொச்சிக் கச்சேரியில் வைத்து காசோலையாக இப்பணம் வழங்கப்பட்டது.

உயிர் இழப்பு ஏற்பட்ட குடும்பங்களில் 23 குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், 18 குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், 8 குடும்பங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதமும் நஷ்டஈடு வழங்கப்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## யு.என்.பி. மேதினக் கூட்டத்தில் வெளிநாட்டு பிரதிநிதிகள்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கொண்டாட்டத்தில் பாகிஸ்தான், இந்தியா, சோவியத் யூனியன், சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் அந்நாடுகளின் கலாசாரக் குழுக்களும் கலந்துகொள்ளும்.

கொழும்பு காலிமுகத் திடலில் நடைபெறவிருக்கும் இம் மேதின வைபவத்தில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் தத்தம் நாட்டுத் தொழிலாளவர்க்கத்தினரது நல்லாசிகளையும் கொண்டு வருகிறார்கள். கலாசாரக் குழுவினர் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்த உள்ளார்கள்.

# ஒரிஸா தமிழ்குழு அகதிகளிடமிருந்து தமிழ் நாட்டைக் காப்பாற்ற உதவுக!

## எல்லைக் காவல்படை தேவை என டில்லியிடம் தமிழ்நாடு கோரிக்கை

இலங்கையிலிருந்து இந்தியப் படை விலகிச்செல்வதற்கு முன்பாகவே தப்பிச்சென்று அகதிகளாக ஒரிஸா மாநிலத்தில் தங்கியிருந்தவர்கள் தமிழ் நாட்டுக்குத் தப்பிவந்து தொல்லை கொடுப்பதைத் தடுப்பதற்கு எல்லைக் காவல் படையை அனுப்புமாறு மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு உதவி கோரியுள்ளது.

ஒரிஸாமுகாமிலிருந்து தமது சொந்த விருப்பத்தின் பேரில் வெளியேறலாம் என்பதும் அவர்கள்போகுமிடம்தெரிந்து கொள்ளப்பட வேண்டுமென்றும் மத்திய அரசு அறிவித்ததைத் தொடர்ந்து ஒரிஸாவிலிருந்து தமிழ்க்குழு அகதிகள் தமிழ்நாட்டுக்குத் தப்பிவரத் தொடங்கியுள்ளனர்.

தமிழ் நாட்டில் வேலூரில் ஐந்துபேரும், ராமேஸ்வரத்திலும் சென்னை கே. கே. நகர், சூளைமேடு ஆகிய பகுதிகளிலும் ஆண்களும் பெண்களுமாக சுமார் இருநூறுபேர்

(6ம் பக்கம் பார்க்க)

## பழம்பெரும் தொழிலாளர் தலைவர் அஸீஸ் காலமானார்

(கொழும்பு)

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அப்துல் அஸீஸ் நேற்றுக் காலை கொழும்பில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது அறுபத்தெட்டு.

சில நாட்களாக நோய் வாய்ப்பட்டிருந்த ஜனாப் அஸீஸ் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொழிலாளரின் நலனுக்காக உழைத்து வந்தார். 1947 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மஸ்கெலியத் தொகுதிப் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த ஜனாப் அஸீஸ் 1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் மாநாட்டில் இலங்கைத் தொழிற்சங்கப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இலங்கை இந்திய காங்கிரஸின் பொதுச் செயலாளராகவும் பணியாற்

(6ம் பக்கம் பார்க்க)

## ஆறாவது திருத்தம் நீக்க வாசுதேவா சம்மதம்

(கொழும்பு)

இலங்கையின் அரசியலமைப்பிலிருந்து ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு திரு. வாசுதேவநாணயக்காரா வின் நவசமசமாஜக் கட்சி ஆதரவளிக்க ஒப்புக் கொண்டுள்ளதாக ஈழவர் ஜனநாயகமுன்னணி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது

ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவை திரட்டும் முயற்சியில் ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயலாளர்

(6-ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M.G.M 777,K.K.S Road Jaffna (B–768)

மீண்டும் ஈழநாதம், மங்கை, அம்புலி மாமா, ஆனந்த விகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினமாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன்,யூனியர் போஸ்ட், இந்தியாருடே (தமிழ் – ஆங்கிலம்), FRONT LINE, SPORT STAR மற்றும் ஏனைய எல்லா இலங்கை, இந்திய சஞ்சிகைகளும் மீண்டும் பதிவு செய்யப்படுகின்றன V.P.Pயிலும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீ காந் புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். (B.825)


# முள்ளியவளை ஆஸ்பத்திரியில் இரு நேரங்கள் சேவை இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டத்தில் உள்ளமுள்ளியவளை அரசினர் ஆஸ்பத்திரி இந்திய இராணுவத்தால் சேதமாக்கப்பட்டது

பின்னர் அது திருத்தியமைக்கப்பட்டு இயங்கவைக்கப்பட்டது. ஆனால் இங்கு ஒரு நேரமே சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலமைவழமைக்குத் திரும்பியுள்ளதனால் ஊழியர்கள் நோயாளரின் வசதிக்கேற்ப இரு நேரமும் சேவைகளை நடாத்த முன்வர வேண்டும் என இப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

வைத்திய சேவை அத்தியாவசிய சேவை என்று அரசு கூறியுள்ளபோது இந்த ஆஸ்பத்திரி ஒரு நேரம் மட்டும் சேவையாற்றுவது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

தற்போதைய உஷ்ணகாலத்தில் பலருக்கு பல்வேறு நோய்கள் இங்கு பீடித்திருப்பதால் ஒரு நேரச் சேவையால் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

## முள்ளிக்கிராம மக்களுக்கு 25 வீடுகள் அமைக்கப்படும்

(சுதுமலை)

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள முள்ளிக்கிராம மக்களுக்கு 25வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் ஒரு திட்டத்திற்கு யாழ். அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும் ஆனைக்கோட்டை கலை ஒளி சனசமூக நிலையமும் ஒத்துழைப்பு நல்க முன்வந்துள்ளன.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் ஒவ்வொரு வீட்டிற்கும் வழங்கப்படும் 15000 ரூபா நிதியுடன் மற்றும் உதவிகளை வழங்கி ஓரளவு வசதியான வீடுகளைக் கட்டிக் கொடுப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இது தொடர்பான ஓர் ஆலோசனைக்கூட்டம் ஆனைக்கோட்டை கிராமோதய சுகாதார நிலையத்தில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கே.சிவசம்பு தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபன தொடர்பு அதிகாரி திரு எஸ். பரமநாதன் அகதிகள் புனர்வாழ்வு கழக பிரதிநிதிகள் கலை ஒளி சனசமூகநிலைய பிரதிநிதிகள் யாழ். செயலக திட்டமிடல் அதிகாரி இப்பகுதி கிராம சேவையாளர் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டார்கள்.

இவ் வேலைகளைக் கண்காணிப்பதற்காக ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் திரு. வி. சந்திரராஜ் தலைமையில் ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

பரீட்சார்த்த நடவடிக்கையாக மேற் கொள்ளப்படும் இத்தொகுதி குடியிருப்பு திட்டம் வெற்றியளிக்குமேயானால் இன்னும் பலருக்கு நாம் இந்த முறையில் வீடுகளைக் கட்டிச் கொடுக்கலாம் என்று உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (19)

## தெய்வீகமகாநாடு

(நல்லூர்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று முதல் எதிர்வரும் 9-5-1990 புதன் கிழமை முடியவுள்ள நாட்களில் ஆதீன கலாமண்டபத்தில் திருநெறிய தெய்வீக மகாநாடு நடைபெறும். இக்காலங்களில் மேற்படி ஆதீனத்தில் உற்சவம், பண்ணிசை, புராணபடலம். உரையரங்கு, ஆகியன இடம் பெறும்.

திருநெறிய தெய்வீக மகாநாடு இன்று காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகின்றது. இவ்விழாவில் திருப்பதிகம் ஓதுபவர் சங்கீத பூஷணம் மு. நவரத்தினம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்குவார். தலைமையுரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நிகழ்த்துவார்.

## புதிய கட்டிடம்

(வண்ணார்பண்ணை)

இது வரை தற்காலிகமாக ஆடியபாத வீதியில் இயங்கி வந்த நல்லூர் உதவிஅரசாங்க அதிபர் பணிமனை திருநெல்வேலி விவசாயப்பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படவுள்ளது. திங்கள் காலை 9 30 மணிக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கத்

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## எழுத்தாளர் அகளங்கனுக்கு பாராட்டு

(வவுனியா)

காவியங்கள் அங்கு இருக்கும் பாத்திரங்களினால் தான் புகழடைகின்றன, கம்பராமாயணத்திலே இராவணனுக்கு இல்லாத புகழ், கும்பகர்ணனுக்கு உண்டு. பாரதத்திலே துரியோதனனுக்கு இல்லாத புகழ் கர்ணனுக்கு உண்டு. பாத்திரங்களின் குண இயல்புகளே இதற்குக் காரணம்.

வவுனியா ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலில் எழுத்தாளர் அகளங்கனுக்கு பொன்னாடை போர்த்தும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் போது, திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அகளங்கனால் மேற்படி கோவிலில் மகாபாரத விரிவுரை நடாத்தப்பட்டு முடிவடைந்த கடைசி நாளான அன்று 'காவியமாமணி பட்டம்' திக்கவயல் சி. தர்மகுலசிங்கத்தினால் வழங்கப்பட்டது.

இந்து மாமன்றத் தலைவர் திரு. செல்லையா இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்தார். (தி)

## நெடுங்கேணியில் தேனிசை செல்லப்பா

(முள்ளியவளை)

'தேனிசை செல்லாப்பாவின்' எழுச்சிப் பாடல்கள் இசை நிகழ்ச்சி மே மாதம் இரண்டாம் திகதி நெடுங்கேணி திறந்த வெளி அரங்

அம்பாறை எல்லைக்கிராம

## தமிழ்க்குடும்ப விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டஎல்லைக்கிராமமான தெவிகியாமடு சிங்களக் குடியேற்றம் மற்றும் அங்கிருந்து இடம் பெயர்ந்துள்ள தமிழ்க் குடும்பங்களின் நிலவரம் குறித்து விடுதலைப்புலிகள்மக்கள்முன்னணி பொதுச்செயலாளர்யோகரட்ணம் யோகிக்கு விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர்கரிகாலன்உட்படவிடுதலைப் புலிகள் முக்கியஸ்தர்கள் அண்மையில் அக்கிராமத்திற்கு சென்று நிலமையைஆராய்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் தங்கிஇருக்கும் விடுதலைப்புலிகளின்முக்கியஸ்தர்கள் அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீட்டின் கவனத்திற்கு இதைக்கொன்டுவருவார்கள்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையிலானஅடுத்த கட்டப் பேச்சு வார்த்தையில் இவ்விவகாரம் குறித்து பேசப்படும்என்று விடுதலைப்புலிகள் அலுவலகப்பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (37


### தேங்காய் விற்பனைக்கு உண்டு

புலோப்பளை ராஜா தோட்டத்தில் தேவையான தேங்காய்களைத் தெரிவு செய்து நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

முகாமையாளர்



### பதவி வெற்றிடம்

பூநகரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொதுமுகாமையாளர் தரம் 101 - 9.

(1) கல்வித் தகமைகள்

கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது 5 வருடகால அனுபவம் பொருந்திய முன்னைநாள் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது பொது முகாமையாளர் தரத்திற்கு குறையாத இரண்டு வருட அனுபவத்துடன் ஐந்து வருடக்கூட்டுறவு அனுபவம்.

(2) சம்பளம்-

கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின் பொது முகாமையாளர் தரம் 104 – 9க்கு அமைவாக அத்தோடு வாழ்க்கைச் செலவுப்புள்ளியும்.

400 - 720
......................
20X10 – 30X4

2. கணக்காளர் தரம் 104 – 10

(1) கல்வித்தகமைகள்

தொழில் நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட கணக்கியலில் டிப்ளோமா சான்றிதழ் அல்லது கூட்டுறவு வேலையாளர் உயர்தரப்பத்திரத்துடன் ஒருவருட கூட்டுறவு நிறுவனத்தால் வழங்கப்பட்ட அனுபவ சான்றிதழ் அல்லது கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் சாதாரண தராதரப் பத்திரமும் அத்தகைய ஒரு நிறுவனத்தில் பெற்றுள்ள மூன்று வருடகால அனுபவமும் அல்லது ஐந்து வருடகால அனுபவம் பொருந்திய முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோ



### யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4 00, 6.45, 9.30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)

**மனோகரா - (யாழ்**
தினசரி 4.00, 6.45, 9.45
ஜெய்சங்கர் ராஜஸ்ரீ நிர்மலா நாகேஸ் நடித்த
**நீதிதேவன்**
(புதிய பிரதி)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
106 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

**வெலிங்டன் யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-30
சனி,ஞாயிறு 10-30,2-30 6-30,9-30
ரகுமான் - நதியா
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00,6-45,9-30
பிரபு-அமலா
**பூ பூவா பூத்திருக்கு**
(கடைசி வாரம்)
(B/860)

மணிக்கு ஆரம்பமாகின்றது. இவ்விழாவில் திருப்பதிகம் ஓதுபவர் சங்கீத பூஷணம் மு. நவரத்தினம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்குவார். தலைமையுரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா நிகழ்த்துவார்.

## புதிய கட்டிடம்

(வண்ணார்பண்ணை)

இது வரை தற்காலிகமாக ஆடியபாத வீதியில் இயங்கி வந்த நல்லூர் உதவிஅரசாங்க அதிபர் பணிமனை திருநெல்வேலி விவசாயப்பாடசாலைக்கு அருகில் அமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படவுள்ளது. திங்கள் காலை 9 30 மணிக்கு உதவிஅரசாங்க அதிபர் திரு.ஆ மகாலிங்கத்தினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இக்கட்டிடம் முன்னைய நல்லூர் உதவிஅரசாங்க அதிபர் க.சண்முகநாதனின் முயற்சியினால் இக்கட்டிடத்திற்கான அடிக்கல் முன்னர் நாட்டப்பட்டது. இவ்வைபவத்திற்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் பிரதம விருந்தினராகக்கலந்துகொள்வார். (44)


## புதிய சமாதான நீதிவான்

(பருத்தித்துறை)

இளைப்பாறிய அரசாங்க அதிபர் திரு.கந்தையா தேவசிகாமணி நீதிஅமைச்சினுல் சமாதான நீதிவானுக நியமிக்கப்பட்டு யாழ்.மாவட்ட நீதிபதி திரு.எஸ்.பாலவடிவேல்முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தார்.

இவர் இலங்கை நிர்வாக சேவையில் கூடிய காலம் வவுனியா,முல்லைத்தீவு மாவட்டங்களிலும்,இறுதியாக கிளிநொச்சி அரசாங்க அதிபராகவும்பணியாற்றியவர். இவர் பருத்தித்துறைவிஞயகர்முதலி வீதியைச் சேந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது. (25)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### குமாரகுலசிங்கம் வேலவன் (சாள்ஸ்)

பிறப்பு 1967-07-31 — இறப்பு 1988-04-30

மௌனம் சூழலை ஆக்கிரமிக்கும்
ஆயினும்...
விடுதலையின் மெல்லிய கீதம்
எங்கும் பரவும்...
நினைவுகளில் பின்னோக்க...
உன் உருவே எங்கெங்கும்
தாயகத்தின் மீட்புக்காய்
தலைநிமிர்ந்து நீ நின்றாய்!

தாய், சகோதர, சகோதரிகள்
மச்சாள்மார், மச்சான்மார்
மருமக்கள், பெறாமக்கள்

(R/434)

ரை நடாத்தப்பட்டு முடிவடைந்த கடைசி நாளான அன்று 'காவியமாமணி பட்டம்' திக்கவயல் சி. தர்மகுலசிங்கத்தினால் வழங்கப்பட்டது.

இந்து மாமன்றத் தலைவர் திரு. செல்லையா இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்தார். (தி)

## நெடுங்கேணியில் தேனிசை செல்லப்பா

(முள்ளியவளை)

'தேனிசை செல்லாப்பாவின்' எழுச்சிப் பாடல்கள் இசை நிகழ்ச்சி மே மாதம் இரண்டாம் திகதி நெடுங்கேணி திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

கடந்த ஆறு வருடங்களின் பின் நெடுங்கேணிப் பிரதேசத்தில் நடைபெறும் பிரமாண்டமான இசை நிகழ்ச்சி இதுவாகும். (58)

## மீண்டும் நடைபெறுமா?

(புங்குடுதீவு)

நயினாதீவு பிரதான வீதி குன்றும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலைமைகளால் திருத்தப்படாது இருந்த இவ்வீதி தற்போது உள்ள நல்ல சூழ்நிலையின் போதாவது திருத்தப்படாதா என இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அத்துடன் கடற்படையினரால் பிரதான வீதி முழுவதுமாக மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளதால் இனியாவது இங்கு முன்பு நடைபெற்று வந்த பஸ்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் இப்பகுதி மக்கள் ஆவல் கொண்டுள்ளனர். (22)

டுறவுப் பரிசோதகர் அல்லது பொது முகாமையாளர் தரத்திற்கு குறையாத இரண்டு வருட அனுபவத்துடன் ஐந்து வருடக்கூட்டுறவு அனுபவம்.

(2) சம்பளம்-

கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின் பொது முகாமையாளர் தரம் 104 – 9க்கு அமைவாக அத்தோடு வாழ்க்கைச் செலவுப்புள்ளியும்.

400 - 720
......................
20X10 – 30X4

2. கணக்காளர் தரம் 104 – 10

(1) கல்வித்தகமைகள்

தொழில் நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட கணக்கியலில் டிப்ளோமா சான்றிதழ் அல்லது கூட்டுறவு வேலையாளர் உயர்தரப்பத்திரத்துடன் ஒருவருட கூட்டுறவு நிறுவனத்தால் வழங்கப்பட்ட அனுபவ சான்றிதழ் அல்லது கணக்கியலில் திறமைச் சித்தியுடன் கூடிய கூட்டுறவு வேலையாளர் சாதாரண தராதரப் பத்திரமும் அத்தகைய ஒரு நிறுவனத்தில் பெற்றுள்ள மூன்று வருடகால அனுபவமும் அல்லது ஐந்து வருடகால அனுபவம் பொருந்திய முன்னை நாள் கூட்டுறவுப் பரிசோதகர்.

(2) சம்பளம்:-

கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின் கணக்காளர் தரம் 104 - 10 க்கு அமைவாக அத்தோடு வாழ்க்கைக் செலவுப் புள்ளியும்.

350 – 615
......................
15X7 – 20X8

(3) வயது – மேற்குறிப்பிட்ட இரு பதவிகளுக்கும் 25 – 40 வரை (விண்ணப்ப முடிவு திகதி அன்று)

(4) விண்ணப்ப முடிவு திகதி – 15.05.1990

குறிப்பு: சங்க எல்லைப் பரப்பிற்குள்ளும் சங்க ஊழியர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் தலைவர், பூநகரி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், பூநகரி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்ப தபால் உறையில் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

முக்கிய குறிப்பு:- விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் நேற்முகப் பரீட்சைக்கு தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது. விண்ணப்பித்த சகலரும் 16.05 90 இல் காலை 9.30 மணிக்கு சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு சகல மூலப்பிரதிகளுடன் சமூகம் கொடுக்கவும்.

தலைவர்
பூநகரி தெ. ப. பொ. உ. கூ. சங்கம்
பூநகரி

(B/872)

(கலர்)

**வெலிங்டன் யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-30
சனி,ஞாயிறு 10-30,2-30
6-30,9-30
ரகுமான் - நதியா
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00,6-45,9-30
பிரபு-அமலா
**பூ பூவா பூத்திருக்கு**
(கடைசி வாரம்)
(B/860)

## நாதஸ்வரக் கலைஞர் கௌரவிக்கப்பட்டார்

(சுதுமலை)

இணுவில் பிரபல நாதஸ்வர வித்துவான் கே. ஆர். சுந்தரமூர்த்தியின் வித்துவத்திறனையும், ஈழ நாட்டில் அன்னார் ஆற்றிய இசைச் சேவைகளையும் பாராட்டி வைபவமொன்று நடத்தப்பட்டது.

இணுவில் மஞ்சப்பதி அருள்மிகு அருணகிரிநாத சிவசுப்பிரமணிய ஸ்வாமி தேவஸ்தானத்தில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. கே. ஆர். சுந்தரமூர்த்திக்கு .'நாதஸ்வர கானகலா ஸாகரம்'' என வழங்கிய கௌரவவிருதும் வழங்கப்பட்டது.

இவ்வைபவத்தில்சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் நாதஸ்வரமேதை திரு கே. பத்மநாதன் ஆகியோர் பாராட்டுரை வழங்கினார்கள்.


**மங்கள வைபவங்களா......**

❀ புதுப்புது டிசைன்களில் உடைகளை தேர்வு செய்யுங்கள்! ❀ நாகரிக உலகில் நவீன ரகமான **Bata** பாதணிகள்
❀ உங்கள் இல்லங்களை அழகுறச் செய்யும் அலங்காரப் பொருட்கள், பன்விகுட்ஸ் பொருட்கள், பிளாஸ்டிக் பாத்திரங்கள் அனைத்திற்கும்
❀ இல்லத்தரசிகளின் உள்ளம் விரும்பும் அழகான எவர்சில்வர் பாத்திரங்களுக்கும்

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் தெரிவுசெய்ய நாடுங்கள்!

**ஸ்ரீ குமரன் ஸ்ரோர்** பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.

(B-863)

# சர்வதேச பயங்கரவாதத்திற்குப் பாகிஸ்தான் தளமாக உள்ளது - வி. பி. சிங்

(டில்லி)

சர்வதேச பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதற்கு பாகிஸ்தான் தளம் அமைத்து கொடுப்பதாக இந்தியப் பிரதம மந்திரி வி. பி. சிங் குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

சனிக்கிழமை லக்ளோவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு டாங்கு எதிர்ப்பு கண்ணிகள், இயந்திரத் துப்பாக்கிகள் ராக்கெட்டுகள் போன்ற அதி நவீன ஆயுதங்களை அளித்து வருவதாகவும் அவர் கூறினார்.

அதே சமயம் பாகிஸ்தான் அணுக் குண்டுகளை தயாரிக்குமேயானால் இந்தியாவின் பாதுகாப்பிற்காக அணுசக்தி கொள்கையை மறுபரிசீலனை செய்யவேண்டி இருக்கும் என்றும் பிரதமர் வி. பி. சிங் குறிப்பிட்டார்.

இந்திய- பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் சென்ற வியாழக்கிழமை நடத்திய பேச்சுவார்த்தை நம்பிக்கைக்குப் பின்னரும் காஷ்மீர் விவகாரம் குறித்து இரு நாடுகளுக்கும் இடையே பதட்ட நிலையே மீண்டும் ஏற்பட்டிருக்கிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறுகிறது.

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பேச்சுவார்த்தையின்போது குறிப்பிட்டவற்றைப் பேணவில்லை என்றும், இந்திய நாட்டிற்கு எதிரான பிரசாரத்தில் அவர் ஈடுபடுகிறார் என்றும், இந்தியாவின் வெளியுறவு அமைச்சகம் மேலும் கூறுயது.

இதேவேளை காஷ்மீரில் மேலும் நான்கு பேர் இந்திய எதிர்ப்பு முஸ்லிம் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவரை இவர்கள் தூக்கில் இட்டனர்.



# அமெரிக்காவின் வாணிபத்தாக்குதல் இந்தியா பலத்த கண்டனம்

(டில்லி)

அமெரிக்காவின் விசேட 301 சட்டத்தின் கீழுள்ள வாணிப தாக்குதல் பட்டியலில் இந்தியாவை வைத்திருப்பது என்ற அமெரிக்காவின் முடிவு இந்திய தலைவர்கள் மத்தியில் பலத்த எதிர்ப்புக்களை எழுப்பியிருக்கிறது.

அமெரிக்காவுடனான வர்த்தகத்தில் இந்தியாவின் பற்றாக்குறை 85 கோடி 10 லட்சம் டொலர்கள் மட்டுமே. ஆனால் 500கோடி பற்றாக் குறையுள்ள ஜப்பானை அத் தாக்குதல் பட்டியலில் இருந்து நீக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ் புஷ்ஷின் இத் தீர்மானத்தை இந்திய பாராளு மன்ற உறுப்பினர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை அமெரிக்காவில் வெளியாகும் நியூயோர்க் ரைம்ஸ்ன் வர்த்தகத்துறை செய்தியாளர் ''இந்தியா, அமெரிக்காவின் சட்டதிட்டங்களை மறுத்து விட்டதனால் தான் இந்தியாவை ஒதுக்கி வைக்கும் நோக்குடன் திட்டமிட்ட முயற்சியே இந்த முடிவு'' என்று எழுதியிருக்கிறார்கள்.

அமெரிக்காவின் இத் தீர்மானம் பற்றி கருத்துத்தெரிவித்த இந்தியப் பிரதமர் வி. பி. சிங் எந்தவொரு தாக்குதலுக்கும் இந்தியா அடிபணியாது என்று கூறினார்.

## மண் அள்ளத் தடை

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேசத்திற்குட்பட்ட கல்லுண்டாவெளி, முள்ளி, நவாலி போன்ற கிராமங்களில் காணப்படும் மண் மேடுகளில் இருந்து மண் அள்ளுவது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினால் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்பதை மானிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு சங்கர் ஊடாக பொது மக்ளுக்கு அறியத்தருகின்றார்(19)

## தமிழ், முஸ்லிம் கலவரம் இனிமேல் நிகழாது - காஸ்ரோ

(அம்பாறை மாவட்ட அலுவலக நிருபர்)

''அம்பாறை மாவட்டத்தில் இனிமேல் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பிரச்சினைகள் ஏற்படுவதற்கிடமில்லை. அனைத்து முஸ்லிம் கிராமங்களிலும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கிளைகள் அமைக்கப்படுவதற்கான முயற்சிகளில் முஸ்லிம் இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர்''

சாரைதீவை அடுத்துள்ள மாளிகைக்காடு முஸ்லிம் கிராமத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கிளைக் காரியாலயம், முஸ்லிம் இளைஞர்களால் அமைக்கப்பட்டு இடம்பெற்ற திறப்புவிழா வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ மேற் கண்டவாறு கூறினார்.

கல்முனை முஸ்லிம் உதவி அரச அதிபர் பிரிவு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இணைப்பாளர் திரு. பிலிப் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. காஸ்ரோ மேலும் பேசுகையில், அம்பாறை மாவட்டத்தில் கல்முனைச்குடி, சாய்ந்தமருது பகுதிகளில் கடந்த காலங்களில் மக்கள் முன்னணிக் கிளைகள் அமைப்பது மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால், நாம் அங்கெல்லாம் ஆயுதங்களைக் கொண்டு புலிகள் முகாம்களை அமைக்க விரும்பவில்லை.

முஸ்லிம் மக்கள் எமது அணுகுமுறையையும், நிலைப்பாட்டையும், இலங்கை அர...

லயத்தைத் திறந்தோம். இன்றிலிருந்து இப்பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பிரச்சினைகள் முற்றாக நீங்கிவிடும் என எதிர்பார்க்கின்றோம்.

இதேபோல் சகல முஸ்லிம் கிராமங்களிலும் சிற்றூர் கிளைகள் அமைக்கப்பட்டு முஸ்லிம் மக்களும் எம்முடன் இணைந்து, எமது ஒற்றுமையை நிரூபிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்'' என்றும் கூறினார்.

ஈற்றில் மக்கள் முன்னணிக் கிளை நிருவாகிகள் தெரிவும் இடம்பெற்றன. (48)

## கெவிலியா மடு அகதிகளுக்கு மே மாதம் பங்கீடு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கெவிலியா மடு அகதிகளுக்கு மே மாதம் பங்கீட்டு உணவு வழங்க புனர்வாழ்வு அமைச்சுப்பணிப்பாளர் அனுமதியளித்துள்ளார்.

அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டார். (37)

# சர்ச்சைக்குரிய பிரிட்டிஷ் எழுத்தாளர் பிரச்சாரத்தைக் கைவிடும்படி கோருகிறார்

(லண்டன்)

இந்தியாவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆங்கில நாட்டுப் பிரஜையுமாகிய சல்மன் றுஷ்டி ஒரு வருடத்திற்கு மேலான அஞ்ஞான வாசத்துக்குப்பிறகு.பி.பி சிக்கு தொலைபேசி மூலம் சென்ற வெள்ளியன்று வழங்கிய பேட்டி ஒன்றில் தமக்கெதிரான பிரசாரத்தை கைவிடுமாறு கேட்டுள்ளார்.

இஸ்லாமிய சமயத்தினரைப் புண்படுத்தும் வகையில் இவர் எழுதிய சாத்தானின் கவிதைகள் என்ற நூல் இஸ்லாமிய உலகில் பெரும் சலசலப்பை உண்டாக்கியது.

அல்ஹாவை நிந்தனைப் படுத்தும் புத்தகத்தை எழுதியதற்காக ஈரானின் ஆன்மீகத் தலைவரான அஜத்துல்லா கொமேனி இவருக்கு மரண தண்டனை விதித்திருந்தார். மரணதண்டனைக்குப் பிறகு இவருக்கெதிரான கொலைப் பயமுறுத்தல்கள் தொடர்ந்தன. கொமேனி சென்ற வருடம் ஜூனில் இறந்துவிட்டார் என்றாலும் சல்மன் றுஷ்டிக்கெதிரான மரணதண்டனை இன்றும் அமுலில் உள்ளது.

என்னைக் கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. போதுமான சாட்சியங்கள் இல்லை என்கிறார்கள். இதில் எனக்குச் சிறிது சந்தேகம் - இவ்வாறு சல்மன் தன் மறைவிடத்திலிருந்து தொலைபேசியில் பி. பி. சிக்குத் தெரிவித்தார்.

சாத்தானின் கவிதைகள் நூல் தொடர்பாக இங்கிலாந்துக்கும் ஈரானுக்குமிடையில் விரிசல் ஏற்பட்டது. ஈரான் இங்கிலாந்துடனான தனது ... எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர். பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் எதிர்ப்பு ஊர்வலங்களின்போது 20க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

இன்று இங்கிலாந்தில் மெய்பாதுகாப்பாளருடன் வாழும் சல்மன் றுஷ்டி, 14 மாதங்கள் தலைமறைவான வாழ்க்கைக்குப் பிறகு தனக்கும், தன் நூலுக்கும் எதிரான பிரசாரத்தைக் கைவிடும்படி கேட்டுள்ளார். இருந்தும் தன் இருப்பிடத்தை றுஷ்டி இனம் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

## யுத்த விமான உற்பத்திச் செலவில் அமெரிக்கா வெட்டு

(வாஷிங்டன்)

அமெரிக்கா தனது ராணுவ விமானங்கள், உற்பத்தி திட்டங்களில் பெருமளவுசெலவுக் குறைப்பை அறிவித்திருக்கிறது.

கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் ஏற்பட்ட பல மாற்றங்களை அடுத்தே இந்த நடவடிக்கையை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் அறிவித்தார்.

## கிளிநொச்சியில் 8 லட்சம் ரூபா செலவில் மகளிர் விடுதி!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் எட்டு இலட்சம் ரூபா செலவில் மகளிர் விடுதி ஒன்று அமைக்கப் படவுள்ளது. இதற்கான நிதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் ஒதுக்கியுள்ளார் ... களுக்கான விடுதியொன்றை அமைக்க முன் வந்துள்ளார்.

சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படவிருக்கும் இவ்விடுதியில் ஒரே நேரத்தில் இருபது பெண்கள் தங்கியிருக்கக் கூடியதாக இவ்விடுதி அமையும். இவ்விடுதி கிளிநொச்சி கச்சேரி பஸ் நிலையம். புகையிரத நிலை...

## அங்கோலா அகதிகள் பட்டினியால் மடிவு

(லுஹண்டா)

அங்கோலாவில் உள்ளஅகதிகள் பசியினால் இறக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர் என செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

சுமார் 49.035 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். அத்துடன் 90சதவீத மக்கள் போசாக்கின்மையால் கஷ்டப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஹியூலா, நமீபே, கியூனின் ...

## தபாற்கந்தோர் அமைக்க ஆலயக் காணி

(கல்லாறு)

தபாற் திணைக்களம் நான்கரை லட்சம் ரூபா செலவில் கல்லாறு தபாற் கந்தோரை அமைப்பதற்கு நிதி ஒதுக்கியும் இவ்வளவு காலமும் பொருத்தமான காணி கிடைக்காததால் தபாற் கந்தோர் அமைக்கப்படவில்லை. வாடகைக் கட்டடத்திலேயே பலவருடங்களாக இயங்கி வருகின்றது. பெரியகல்லாறு ஸ்ரீசர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை அண்மையில் பொதுச் சபையைக் கூட்டி தபாற் கந்தோர் அமைப்பதற்கான காணி சம்பந்தமாக ஆராய்ந்து பெரிய கல்லாறு மடத்தடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் ஆலயத்திற்குச் சொந்தமான காணியை வழங்குவதற்குத் தீர்மானம் நிறைவேற்றி தபாற் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்துள்ளது. (45)

## கிளிநொச்சி கச்சேரியில் பிறப்பு, இறப்பு பத்திரங்கள் துரிதமாக வழங்கப்படுகிறது

(சுதுமலை)

கிளிநொச்சி மாவட்ட மேலதிக பதிவாளர் காரியாலயத்... அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் உடனுக்குடன் பரிசீலனை செய்...

## செலவில் அமெரிக்கா வெட்டு

(வாஷிங்டன்)

அமெரிக்கா தனது ராணுவ விமானங்கள், உற்பத்தி திட்டங்களில் பெருமளவுசெலவுக் குறைப்பை அறிவித்திருக்கிறது.

கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் ஏற்பட்ட பல மாற்றங்களை அடுத்தே இந்த நடவடிக்கையை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் அறிவித்தார்.

# கிளிநொச்சியில் 8 லட்சம் ரூபா செலவில் மகளிர் விடுதி!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் எட்டு இலட்சம் ரூபா செலவில் மகளிர் விடுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் க. மாணிக்கவாசகர் ஒதுக்கியுள்ளார்.

கிளிநொச்சியில் அரச ஊழியர்கள் தங்கியிருந்து வேலை செய்வதற்கு போதிய விடுதி வசதிகள் இல்லாதிருப்பதால் ஊழியர்கள் தமது சொந்த ஊரான யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் வந்து வேலை செய்கிறார்கள். இதனால் அன்றாடம் வேலைகள் தாமதமடைந்து வருகின்றன.

இதனைக் கவனத்தில் கொண்ட கிளிநொச்சி அரசாங்க அதிபர் முதலில் பெண்களுக்கான விடுதியொன்றை அமைக்க முன் வந்துள்ளார்.

சகல வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்படவிருக்கும் இவ்விடுதியில் ஒரே நேரத்தில் இருபது பெண்கள் தங்கியிருக்கக் கூடியதாக இவ்விடுதி அமையும். இவ்விடுதி கிளிநொச்சி கச்சேரி பஸ் நிலையம். புகையிரத நிலையம் ஆகியவற்றுக்கு அண்மையில் மிகவும் பாதுகாப்பான இடத்தில் அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

...பிறகு இவருக்கெதிரான கொலைப் பயமுறுத்தல்கள் தொடர்ந்தன. கொமேனி சென்ற வருடம் ஜூனில் இறந்துவிட்டார் என்றாலும் சல்மன் றுஷ்டிக்கெதிரான மரணதண்டனை இன்றும் அமுலில் உள்ளது.

என்னைக் கொலை செய்யப் போவதாகப் பயமுறுத்தியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. போதுமான சாட்சியங்கள் இல்லை என்கிறார்கள். இதில் எனக்குச் சிறிது சந்தேகம் – இவ்வாறு சல்மன் தன் மறைவிடத்திலிருந்து தொலைபேசியில் பி. பி. சிக்குத் தெரிவித்தார்.

சாத்தானின் கவிதைகள் நூல் தொடர்பாக இங்கிலாந்துக்கும் ஈரானுக்குமிடையில் விரிசல் ஏற்பட்டது. ஈரான் இங்கிலாந்துடனான தனது ராஜரீக உறவுகளைத் துண்டித்துக் கொண்டது.

இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் றுஷ்டிக்கு தன் நூலுக்கும் எதிரான பிரசாரத்தைக் கைவிடும்படி கேட்டுள்ளார். இருந்தும் தன் இருப்பிடத்தை றுஷ்டி இனம் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

## அங்கோலா அகதிகள் பட்டினியால் மடிவு

(லுஹண்டா)

அங்கோலாவில் உள்ளஅகதிகள் பசியினால் இறக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர் என செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

சுமார் 49.035 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். அத்துடன் 90சதவீத மக்கள் போசாக்கின்மையால் கஷ்டப்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஹியூலா, நமீபே, கியூனின் ஹவாமபே ஆகிய நான்கு மாகாணங்களும் வரட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

...மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை முஸ்லிம் உதவி அரச அதிபர் பிரிவு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இணைப்பாளர் திரு. பிலிப் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. காஸ்ரோ மேலும் பேசுகையில், அம்பாறை மாவட்டத்தில் கல்முனைக்குடி, சாய்ந்தமருது பகுதிகளில் கடந்த காலங்களில் மக்கள் முன்னணிக் கிளைகள் அமைப்பது மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால், நாம் அங்கெல்லாம் ஆயுதங்களைக் கொண்டு புலிகள் முகாம்களை அமைக்க விரும்பவில்லை.

முஸ்லிம் மக்கள் எமது அணுகுமுறையையும், நிலைப்பாட்டையும், இலங்கை அரசின் உறவையும் கருத்தில் கொண்டு அவர்களாகவே முன்வந்து கேட்டதற்கிணங்கவே இந்த கிளைக்காரியா...

(கல்லாறு)

தபாற் திணைக்களம் நான்கரை லட்சம் ரூபா செலவில் கல்லாறு தபாற் கந்தோரை அமைப்பதற்கு நிதி ஒதுக்கியும் இவ்வளவு காலமும் பொருத்தமான காணி கிடைக்காததால் தபாற் கந்தோர் அமைக்கப்படவில்லை. வாடகைக் கட்டடத்திலேயே பலவருடங்களாக இயங்கி வருகின்றது. பெரியகல்லாறு ஸ்ரீசர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை அண்மையில் பொதுச் சபையைக் கூட்டி தபாற் கந்தோர் அமைப்பதற்கான காணி சம்பந்தமாக ஆராய்ந்து பெரிய கல்லாறு மடத்தடிப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் ஆலயத்திற்குச் சொந்தமான காணியை வழங்குவதற்குத் தீர்மானம் நிறைவேற்றி தபாற் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்துள்ளது. (45)

### கிளிநொச்சி கச்சேரியில்

# பிறப்பு, இறப்பு பத்திரங்கள் துரிதமாக வழங்கப்படுகிறது

(சுதுமலை)

கிளிநொச்சி மாவட்ட மேலதிக பதிவாளர் காரியாலயத்தில் சகல வேலைகளும் துரிதகதியில் நடைபெற்று வருகின்றது.

பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் உடனுக்குடன் பரிசீலனை செய்யப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு மூன்று தினங்களுக்குள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

இதுபற்றி மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு. ந. சதாசிவம் ஐயர் தகவல் தருகையில் கொழும்பில் இருந்து தமக்குத் தேவையான பத்திரங்கள் வேண்டியநேரத்தில் கிடைத்து வருவதால் எந்த நிலுவைகளும் இல்லாமல் பொதுமக்கள் எந்த அசௌகரியங்களுக்கும் உட்படாமல் வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார். (19)

## கலந்துரையாடல்

# கடற்தொழில்கள் பிரச்சினையும் எதிர்கால நடவடிக்கைகளும்

(யாழ்ப்பாணம்)

கடற் தொழிலாளர் பிரச்சினையும் அவர்களின் எதிர்கால நடவடிக்கைகளையும் ஆராயும் முகமாக மே மாதம் மூன்றாம் திகதி காங்கேசன்துறை வீதி மனோகரா தியேட்டரில் ஓர் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்களும் கடற் தொழில் திணைக்கள உயர் அதிகாரிகளும், கூட்டுறவுதுறை உயர் அதிகாரிகளும், கடற் தொழில் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் உட்பட பலர் இதில் பங்குபற்ற உள்ளனர்.

இக் கலந்துரையாடலுக்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றனர். (லோ

# ஞான பாஸ்கரோதய சங்க 70 ஆவது ஆண்டு நிறைவு விழா

(சுதுமலை)

"சங்கங்களோ, சனசமூக நிலையங்களோ அல்லது பொது மன்றங்களோ ஒரு கிராமத்தில் பெயரளவில் மட்டுமிருந்துவிட்டால் போதாது. கிராம மக்களுக்குத் தம்மாலான முடிந்தளவு சேவையை செய்து அவர்களின் தேவைகளின் ஒரு பகுதியை என்றாலும் பூர்த்தி செய்யும்போது தான் அந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதன் அர்த்தம் புலனாகும்.

இவ்வாறு கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சங்கத்தின் 70வது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு.சி.முருகேசபிள்ளைகுறிப்பிட்டார்.

சமாதான நீதவான் திரு. க.முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் ஞான பாஸ்கரோதய சங்கம் கடந்த 70 ஆண்டுகளில் பல துறைகளிலும் மக்களின் தேவைகளை அறிந்து சிறப்பாகப் பணிபுரிந்து பெருவளர்ச்சி கண்டுள்ளது.

இதேசங்கத்தின் ஏனையபிரிவுகளான சனசமூக நிலையம் 42 ஆண்டுகளும், மங்கையர் கழகம் 40 ஆண்டுகளும், விவசாயக் கழகம் 36 ஆண்டுகளும் சிறப்பாகப் பணி புரிந்திருக்கின்றன.

அண்மைக்கால வன்செயல்களின்போது மக்கள் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமப்பட்டநேரத்தில் வெளிநாடுகளில் வேலை செய்யும் இக்கிராமத்து இளைஞர்களின் உதவிகளைப் பெற்றுணவுப்பண்டங்களை வாங்கி இச்சங்கம் மக்களுக்கு விநியோகித்திருக்கின்றது.

இவ்வாறு பலதுறைகளிலும் சிறப்பாக பணியாற்றியமைக்காக இச்சங்க அங்கத்தவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

70 வது ஆண்டு நிறைவை ஒட்டி இச் சங்கத்தால் நடாத்தப்பட்ட விளையாட்டு, பேச்சு சங்கீதம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

தனியார்கல்வி நிறுவன அதிபர்களான திரு. த. வரதராஜன், திரு. த. தனஞ்செயன் ஆகியோரின் சேவை நலம் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

பல கலை நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெற்றன. (19)

## நேற்று வர்த்தக சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வர்த்தக ஊழியர் சங்க பொதுக்கூட்டம் நேற்று யாழ் வைத்தியசாலை வீதி சங்கரப்பிள்ளை கட்டிடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் யாழ். மாவட்ட மக்கள் முன்னணி அமைப்பாளர் இ. ராஜன் ஆகியோர் உட்பட அச்சங்கத்தின் பல உறுப்பினர்கள் பங்குபற்றினர். (லோ)

## மயில்வாகனபுரம்

# 93 குடும்பங்களுக்கு 1 1/2 ஏக்கர் வீதம் காணி பகிர்ந்தளிப்பு

(கிளிநொச்சி)

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மயில்வாகனபுரம் எனும் கிராமத்தில் 93 குடும்பங்களுக்கு தலா 1 1/2 ஏக்கர் வீதம் குடியிருப்புக் காணி வழங்கப்பட்டு உடனடியாக பெர்மிட்டும் வழங்கப்பட்டது.

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் திரு. சதா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற காணி வழங்கும் வைபவத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கலந்து கொண்டு குடியேற்றப்பட்ட மக்களுக்கு காணிக்கான பெர்மிட்டுக்களை வழங்கினார்.

குடியேற்றப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளின் கல்வியை ஆரம்பிப்பதற்காக மயில்வாகனபுரத்தில் ஒரு பாலர் பாடசாலையை அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைத்ததுடன் அம்மக்கள் வழிபடுவதற்காக ஒரு முருகன் ஆலயம் அமைக்க அத்திவாரக் கல்லையும் நாட்டினார்.

இவ் வைபவத்தில் புளியம்பொக்கணை கிராம சேவையாளர் திரு. எஸ். எஸ். சின்னத்தம்பி, பிரமந்தனாறு கிராமசேவையாளர் திரு க. நாகேந்திரன், திரு. க. வைரமுத்து, திரு. வே. சிவஞானசுந்தரம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த)

# வலையிறவு வீதியை பாவனைக்குத் திறக்கவேண்டும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமானநிலையம் முன்பாக மூடப்பட்டுள்ள வலையிறவு வீதி மக்கள் பாவனைக்காகத் திறக்கப்படல் வேண்டுமென விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் எஸ். கரிகாலன் அண்மையில் விமானப்படை உயரதிகாரிகள் சந்திப்பில் வற்புறுத்தியுள்ளார்.

மட்டு. விமானப்படை முகாமில் இச்சந்திப்பு இடம்பெற்றது. மாவட்ட அமைப்பாளர் விசுவும் கலந்து கொண்டார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் முன்வைக்கப்பட்ட சில கோரிக்கைகள் வருமாறு:

★ விமானநிலைய விஸ்தரிப்புக்காகக் காணி சுவீகரிப்பு இடை நிறுத்தப்படல் வேண்டும்.

★ சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நஷ்ட ஈடு தாமதமின்றி வழங்கப்படல் வேண்டும்.

★பாடசாலை, மதவழிபாட்டு தலம், மயானம் சுவீகரிப்புபகுதியில் அடங்குவதால் மக்கள் சுதந்திரமாக அப்பகுதியில் நடமாட அனுமதிக்கப்படல் வேண்டும்.

மேற்படி கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என விமானப்படை அதிகாரிகள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது. (37)

## ஆனை விழுந்தான் குளம் புனரமைப்பு

(கிளிநொச்சி)

ஆனை விழுந்தான் குளம் நவீன இயந்திரங்கள் மூலம் புனரமைக்கப்பட்டு வருகிறது இதற்கு வேண்டிய நவீன இயந்திர சாதனங்கள் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டன.

மேற்படி குளம் புனரமைப்பு வேலையை கிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் கிளிநொச்சி நீர்ப்பாசன இலாக பொறியியலாளருடன் நேரில் சென்று குளம் புனரமைக்க வேண்டிய பணத்தை கிளிநொச்சி அரசாங்க அதிபர் மாகாண சபையிடம் கோரியுள்ளார்.

# வண.பிதா லோங் அடிகளாரின் 29-வது நினைவு தினம்இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் ஸ்தாபகர்களில் முக்கியஸ்தரும் சென். பற்றிக்ஸ் கல்லூரி முன்னாள் அதிபருமான வண. பிதா லோங் அடிகளாரின் 29 ஆவது நினைவு தினம் இன்று 30 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் நகரில் கொண்டாடப்படுகிறது.

இன்று காலை சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்படும். இதில் பழைய மாணவர்கள் கலந்து கொள்வார்கள்.

பொது நூலகத்தில் உள்ள அன்னாரின் உருவச்சிலைக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவனும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. அன்ரன் அல்பிறட் மலர் மாலை அணிவித்து புகழுரை ஆற்றுவார்.

மே மாதம் 22 ஆம் திகதி அன்னாரின் நினைவாக இலங்கை அரசு நினைவு முத்திரை ஒன்றையும் வெளியிடவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தொலைத் தொடர்பு நிலைய மீற்றர்களில் கோளாறு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்திலுள்ள தொலைபேசி மீற்றர்களில் கோளாறு காணப்படுவதாக பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கிறார்கள்.

டிசம்பர் 89 - பெப் 90வரையிலான தொலைபேசி கட்டணம் பாவனையாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

பாவனையாளர் எதிர்பார்த்த கட்டணத்தை விட பன்மடங்கு கட்டணம் காணப்பட்டுள்ளது.

இது குறித்து பிராந்திய தொலைத்தொடர்பு திணைக்களத்தில் புகார் செய்யப்பட்டுள்ளதாக பாவனையாளரொருவர் ஈழநாதத்திற்கு தெரிவித்தார். (37)

## ஆண்டு ஆறுக்கான பிரவேசப்பரீட்சை

யா/பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரபாடசாலை ஆண்டு ஆறுக்கான பிரதேசப்பரீட்சை 30.4.90 திங்கள் காலை 8.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் பிரவேச அட்டை கிடைக்காத மாணவர்களும் பரீட்சை மண்டபத்திற்கு வரலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.


### அகில இலங்கை காந்தி சேவா சங்கம்

அன்புடையீர்,
நீண்ட காலமாக செயற்படாதிருக்கும் மேற்படி சங்கத்தினைப் புதுப்பித்து நடைமுறைப்படுத்த பலமுறை முயன்றும் நாட்டு நிலைமை காரணமாக நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட தடைகள் தற்போது நீங்கிவிட்டபடியினால் கூடிய விரைவில் வருடாந்த பொதுக்கூட்டத்தை நடாத்தி இச்சங்கத்தை புனர் அமைப்புச் செய்ய உத்தேசித்திருப்பதால் இச்சங்கத்தின் பழைய - புதிய அங்கத்தவர்கள் முடிந்தால் அங்கத்துவ இலக்கத்தையும் தற்போதய விலாசத்தையும் குறிப்பிட்டு நம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.
19.04.90

ஊழியர்கள்
சி. க. வேலாயுதபிள்ளை
தலைவர்.



உங்களுக்கு...

- விளையாட்டுச் சாமான்கள் அன்பளிப்புப் பொருட்கள்
- குளிர் பானங்கள் அனைத்தும்......
- வாடகைக்கு வீடியோ கசட்டுகள்
- வாசிக்க நீங்கள் விரும்பிய புத்தகங்கள் படிக்க உதவும் நூலகம்

எல்லாம் ஒரே இடம்.
இவைக்கு ஒருமுறை விஜயம் செய்க

ஸ்ரீ அம்பாள் சென்ரர்
பலாலி வீதி,



எம் மக்களின் குறைதீர
தீராத கஷ்டத்திலும்
ஆறாத சேவை....

எம்மிடம் உங்கள் தேவைக் கேற்ற முறையில்...
மொத்தமாகவும் சில்லறையாகவும்

- பலசரக்கு சாமான்கள்
- நெஸ்லே பால்மா வகைகள்
- பன்சி குட்ஸ் வகைகள்

அத்துடன் உங்கள் கால்நடைகளுக்கு
தவிடு - பிண்ணாக்கு வகைகள்

மற்றும்

உங்கள் வீடுகள், வாகனங்களுக்கு தேவையான
எரிபொருள் விற்பனைக்கு உண்டு

அ. தவம் அன் சன்ஸ்

பலாலி வீதி - கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.

(B/868)



உங்கள் தேவைக் குகந்த வகையில் . .

- எஸ் - லோன் பைப் வகைகள் விரும்பிய அளவு வகைகளில்
- மின்சார உபகரணங்கள் அனைத்தும் தற்போது உங்கள் தேவைக்கு
- சகல விதமான தரமான ரயர் வகைள்
- எல்லா வித ரியூப்புக்களும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் நாடவும்

ரட்ணம்ஸ்


மட்டக்களப்பு

## மீண்டும் புனர்நிர்மாணக் கொடுப்பனவுகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் இடை நிறுத்தப்பட்டிருந்த புனர்வாழ்வு நிவாரண கொடுப்பனவுகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

அரச அதிபர்தி ரு. ஆர். யோகநாதன் மேற்கொண்ட நடவடிக்கையின் பிரகாரம் தற்போது ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

மீளக்குடியமர்வு படி ரூபா 2000மும் தொழில் ஆரம்பித்தல் நிவாரணம் ரூபா4000 ஆகியவற்றிற்காக 22.6 மில்லியன் ரூபா புனர்வாழ்வு அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

உயிர் இழப்பு, காயம் ஆகியவற்றிற்கான நஷ்ட ஈடுக்கு ரூபா 60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை வங்கிக்கு கட்டளை கிடைக்கவில்லை. இந்நிவாரணம் கட்டளை கிடைத்தவுடன் வழங்கப்படுமென செயலகஅதிகாரி ஒருவர் தெரிவித்தார். (37)

மட்டக்களப்பு

## ஒருவார காலத்திற்குள் பிறப்பு இறப்பு சான்றிதழ்கள்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டபதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பம்செய்து ஒருவாரகாலத்திற்குள் பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்கப்படுகின்றன.

இத்தகவலை காணி பதிவாளரும் மாவட்ட இணைபதிவாளருமான திரு எஸ். முத்துக்குமாரன் 'ஈழநாதம்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

தினசரி சராசரியாக 200 பிறப்பு, இறப்புசான்றிதழ்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றன.

பிறப்பு, சான்றிதழ் நேர்முகப் பரீட்சை, அடையாள அட்டை, பாஸ்போர்ட் ஆகியவற்றிற்கு அத்தியாவசியம்என்பதால் பொதுமக்கள் இறுதி நேரம்வரை காத்திருக்காமல் முன்கூட்டியே பெற்றுக்கொள்வது விரும்பத்தக்கது.

காணி பதிவு செய்தல் 1988 ஆம் ஆண்டுவரையில் முடிந்து உள்ளது. 1989 ஆம் ஆண்டுக்கான பதிவு நடைபெறுகின்றன என்றார். (37)

## துர்க்காதேவி காணியில் குழாய்க் கிணறு

(காங்கேசன்துறை)
வலிகாமம்வடக்குப்பிரதேச ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம், சமாசத்திற்குச் சொந்தமான இயந்திரத்தால் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயக்காணியில்இன்றுகாலை 11.30 மணிக்குஅன்பளிப்பாகக் குழாய்க்கிணறுஒன்றுஅடித்துக் கொடுக்கவுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளர் (எண்பார்வை) செ.லிங்கநாதன் இயந்திரத்தைச் சம்பிரதாய பூர்வமாக இயக்கிவைப்பார். சிவத்தமிழ்ச் செல்விதங்கம்மாஅப்பாகுட்டி ஆசியுரை வழங்குவார்.

## வவுனியா குளக்கட்டில் உழவு இயந்திரம் விபத்து

(வவுனியா)
வவுனியா நெளுக்குளம் பகுதியில் வான் ஒன்று குடைசாய்ந்ததில். பெண்கள் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

அம்பிகா (22), வீ. வாசுகி (15) ஆகியோரே காயங்களுக்குள்ளானார்கள்.

இதே சமயம், குளக்கட்டில் கதிகால் ஏற்றிக்கொண்டு சென்ற றக்ரர் ஒன்று குளத்திற்குள் புரண்டு விழுந்ததில்

உங்களுக்கு...

- விளையாட்டுச் சாமான்கள் அன்பளிப்புப் பொருட்கள்
- குளிர் பானங்கள் அனைத்தும்......
- வாடகைக்கு வீடியோ கசட்டுகள்
- வாடகைக்கு நீங்கள் விரும்பிய புத்தகங்கள் படிக்க உதவும் நூலகம்

எல்லாம் ஒரே இடம்.
இவைக்கு ஒருமுறை விஜயம் செய்க

**ஸ்ரீ அம்பாள் சென்ரர்**

பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி கோண்டாவில்.

B/864



- எஸ் - லோன் பைப் வகைகள் விரும்பிய அளவு வகைகளில்
- மின்சார உபகரணங்கள் அனைத்தும் தற்போது உங்கள் தேவைக்கு
- சகல விதமான தரமான ரயர் வகைகள்
- எல்லா வித ரியூப்புக்களும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
எம்மிடம் நாடவும்

**ரட்ணம்ஸ்**

பலாலி வீதி, கோண்டாவில்.

B/ 867



விவசாயிகளே!

உங்கள் பயிர்களுக்குத் தேவையான

- உரவகைகள்
- பங்கஸ் கொல்லிகள்
- களை கொல்லிகள்

மற்றும்

- விவசாய இரசாயனப் பொருள்கள்

இவற்றுடன்...
சகல உள்நாட்டு தினசரிப் பத்திரிகைகளும் விற்பனைக்கு
நாடுங்கள்!

**தயாளன் ஸ்ரோர்ஸ்**

பலாலி வீதி, கோண்டாவில்.

(B/865)



வாகன உரிமையாளர்
உங்களுக்கு...

- சிறந்த முறையில் உங்கள் வாகனங்களை சுத்திகரிப்பு செய்வதில் கைதேர்ந்தவர்கள்...
- சகல விதமான மசகு எண்ணெய் விற்பனையாளர்கள்
- தொழில் அனுபவம் மிக்கவர்களும்; நம்பிக்கையாளர்களும்.

ஒரு முறை விஜயம் செய்க

**லிங்கோ லூப்ரிகேசன் சேவிஸ்**

பலாலி வீதி, கோண்டாவில்.

(B/862)


(காங்கேசன்துறை)

வலிகாமம்வடக்குப்பிரதேச ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம்,சமாசத்திற்குச் சொந்தமான இயந்திரத்தால் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயக்காணியில்இன்றுகாலை 11.30 மணிக்குஅன்பளிப்பாகக் குழாய்க்கிணறுஒன்றுஅடித்துக் கொடுக்கவுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளர் (எண்பார்வை) செ.லிங்கநாதன் இயந்திரத்தைச் சம்பிரதாய பூர்வமாக இயக்கிவைப்பார். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மாஅப்பாகுட்டி ஆசியுரை வழங்குவார்.

## வவுனியா குளக்கட்டில் உழவு இயந்திரம் விபத்து

(வவுனியா)

வவுனியா நெளுக்குளம் பகுதியில் வான் ஒன்று குடை சாய்ந்ததில். பெண்கள் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் வவுனியாவிலிருந்து செட்டிகுளம் நோக்கிச் சென்ற வான் திடீரென்று குடை சாய்ந்ததிலேயே இந்த விபத்து இடம் பெற்றது.

ஏ. அமிர்தலிங்கம் (27 கணேசலிங்கம் (30), லைனல்) (20), வீ. கனகமணி (42) எம். அம்பிகா (22), வீ. வாசுகி (15) ஆகியோரே காயங்களுக்குள்ளானார்கள்.

இதே சமயம், குளக்கட்டில் கதிகால் ஏற்றிக்கொண்டு சென்ற றக்ரர் ஒன்று குளத்திற்குள் புரண்டு விழுந்ததில் றக்ரரில் சென்ற நான்கு பேர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.

கே. வேலு (45) எஸ். சபாரட்ணம் (45) நீ. கருணாகரன் (21) ஏ. வேலு (58) கே. ரத்தினசிங்கம் ஆகியோரே இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களாவார்கள்.

இவர்களில் கே. வேலு என்பவரின் கையொன்றில் முறிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(கி)

## பூநகரியில் மே தினம்

(பூநகரி)

பூநகரி கிளை கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் மேதினப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 01-05-1990 காலை 9.30 மணிக்கு பூநகரி ப.நோ கூ.சங்கத்தின் பிரதம அலுவலகத்தில் நடைபெறும்.

இப்பொதுக் கூட்டத்திற்கு பூநகரிக் கிளை கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத் தலைவர் திரு.ச.விஜயரத்தினம்தலைமைதாங்குகின்றார். மேதின உரையினை பூநகரிக் கிளை கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கச் செயலாளர் திரு.ந.கிஸ்ணபவன் உரையாற்றுவார். மற்றும் பலர் சிறப்புரைஆற்றுவார்கள்.

## பத்தாவது ஆண்டுவிழா

(கல்லாறு)

பெரியகல்லாறு கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் பத்தாவது ஆண்டுவிழா பெரியகல்லாறு வை. எம். சி. ஏ மண்டபத்தில் இரு நாட்கள் அமைதியாக நடைபெற்றது. பூமியில் சமாதானம் என்னும் கருத்தரங்கு, கிழக்குப் பிராந்திய மெதடிஸ்த சபைகளின் இயக்குனர்சபை அங்கத்தவர்களுக்கிடையில் ஆண்டுவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. (45)


விவசாயிகளே! உங்கள் தேவை எங்கள் சேவை

எம்மிடம்

- விவசாய உபகரணங்கள்
- விவசாய இரசாயனப் பொருட்கள்
- களை கொல்லிகள்
- பங்கஸ் கொல்லிகள்

மற்றும் அனைத்து உர வகைகளும்

உங்கள் நம்பிக்கைக்கான முறையில் — தரமான

- பலசரக்குச் சாமான்கள்
- பால்மா வகைகள்
- பன்ஸிகுட்ஸ் அலங்காரப் பொருட்கள்

அனைத்தும் மொத்தமாகவும், சில்லறையாகவும்,

உள்ளூர், வெளியூர் குளிர்பானங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்கும் ஸ்தாபனம்

**திருநாவுக்கரசு அன் சன்ஸ்**

பலாலி வீதி,
கோண்டாவில்.

(B-866)

சிந்தனைக்கு

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்

– திருக்குறள்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 30 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## குஜ்ராலும் அஷ்ரப்பும்!

"இலங்கையில் தமிழர்களின் பாதுகாப்புப் பொறுப்பு இலங்கையின் உள்நாட்டு விவகாரமாகும். இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு இலங்கை அரசைச் சார்ந்தது."

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் மேற்கண்டவாறு ஒரு பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்னரும் அமைச்சர் குஜ்ரால் இதே கருத்தை வெளியிட்டிருந்தார்.

''வெளிநாடுகளில் இந்தியா இராணுவ ரீதியில் இனியும் தலையிடமாட்டாது. இன்னொரு நாட்டில் இந்திய இராணுவம் தலையீடு செய்யும் சூழ்நிலை வருங்காலத்திலும் ஏற்படமாட்டாது'' என்றும் அமைச்சர் குஜ்ரால் கூறியிருக்கிறார்.

இலங்கைத் தமிழ் மக்களுக்காக அவர்களின் சம்மதம் இன்றி ராஜீவ்காந்தியும் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் செய்துகொண்ட ஒப்பந்தமும் அமைதிப்படை என்ற பெயரில் இங்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் செய்த அட்டூழியங்களும் இவர்களை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய போராட்டமும் இதனால் இந்திய இராணுவம் அவமானத்துடன் நாடு திரும்ப நேர்ந்ததையும் இந்திய அமைச்சர் குஜ்ரால் வெளிப்படையாகச் சொல்ல முடியாது. இதனால் இரத்தினச் சுருக்கமாக மறைமுகமாகக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

நாமும் அவரது நிலையைச் சுருக்கமாகச் சொன்னால் ''சட்டி சுட்டதடா, கை விட்டதடா'' என்பதுதான் இதன் பொருள்.

இந்திய அமைச்சரும் இந்திய அரசும் ஏன் இலங்கை அரசும்கூடக் கடந்தகால அனுபவங்களிலிருந்து 'பாடம் படித்து' உண்மை நிலையைத் ''தெளிந்து உணர்ந்து'' நடந்து கொள்ள முன்வந்துள்ள போதிலும் நம்மவர்கள் சிலர் இன்னும் நிலைமையைப் புரிந்து கொள்ளவில்லை; அல்லது புரிந்தும் புரியாதமாதிரி நடந்து மீண்டும் குட்டையைக் குழப்ப நினைக்கிறார்களோ தெரியவில்லை.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் இந்தியப்படை இங்கிருந்த போது அதனுடனும் றோ என்ற இந்திய உளவுப் பிரிவுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தாரென்பதும் இவைகளிடமிருந்து பல உதவிகளைப் பெற்றாரென்பதும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் வேற்றுமைகளை ஏற்படுத்த முயன்றாரென்பதும் பகிரங்கமாக

## மேதினம் உரிமை மறுக்கப்பட்ட மக்களின்

# பொதுப் பிரகடன நாள்

**1886** மே 1ஆம் நாள் எட்டு மணிநேர வேலை கோரி அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில், தொழிலாளர் ஸ்தாபன ரீதியாக ஒன்று திரண்டு போராடி, இரத்தம்சிந்தி தமது 'எட்டு மணி நேர வேலை' என்ற கோரிக்கையை வென்றெடுத்த தினத்தை இன்று உலகம் பூராகவுள்ள தொழிலாளிகளும், ஒடுக்கப்பட்ட மக்களும் ஓர் எழுச்சித் தினமாக கொண்டாடுகிறார்கள், வரலாற்றில் தொழிலாளிவர்க்கம் அமெரிக்க எதேச்சாதிகார ஆட்சியிடமிருந்து தமது நியாயபூர்வமான கோரிக்கையை வென்றெடுத்த நாளை பாரிஸ்சில்கூடிய இரண்டாவது அகிலம், மேமுதலாம் திகதியை சர்வதேச தொழிலாளர் தினமாகப் பிரகடனப்படுத்தியது,

1917 ரஷ்ய ஒக்டோபர் புரட்சிக்குப் பிறகுதான் மே தினம் புதிய உத்வேகத்துடனும், உணர்வுடனும் தொழிலாளி வர்க்கத்தினால் கொண்டாடப்படத் தொடங்கியது. மாஸ்கோ வழியாகப் பீக்கிங்கிலும், கல்கத்தாவிலும் பாட்டாளிகளினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தினமாக மேதினம் உருவெடுத்தது. பட்டிதொட்டிகளிலெல்லாம் மேதினத்தைக் கொண்டாடினார்கள். அமெரிக்காவில் தொழிலாளர் போராடி சட்டப்படி எட்டு மணித்தியால வேலையை வென்றெடுத்த தினமாக மட்டும் கருதாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கான ஒரு பொதுப் பிரகடன நாளாகவே கொண்டாடப்படுகிறது.

இலங்கையிலும் காலம் காலமாக பிரதான நகரங்களில் மேதினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால், இலங்கையில் இதுவரை கால ஆட்சியிலிருந்த பேரினவாத அரசுகள் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மறுத்து வந்துள்ளன. இலங்கையில் பாட்டாளி வர்க்கத் தலைவர்களும், இடதுசாரிகளும் தொழிலாளி வர்க்கம் மாமூல் நிகழ்ச்சியாகவே இடம் பெற்றது.

### இலங்கையில் மேதினம்

இலங்கையில் மேதினத்தை ஒரு ஓய்வு தினமாகவும் களியாட்டதினமாகவும் இடதுசாரிகள் நிகழ்த்தியுள்ளார்கள். இத்தினத்தில் கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் கட்சிகள் தென் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்களைத் திரட்டித் தம் பலத்தை வெளியிடும் ஒரு நாளாகவே கருதினார்கள். அதிகார வர்க்கத்துக்கெதிராகக் கலகக்கொடி தூக்கும் ஓர் முன்னெச்சரிக்கை நாளாகக் கருதாமல் வெறும் கோஷங்களை முன்வைக்கும் நாளாகவே கொண்டாடினார்கள் ஆயுத வர்க்கமும், சந்தர்ப்ப வாதத்தலைவர்களும், சர்வதேசப் பிற்போக்கு வாதச் சக்திகளும் இத் தினத்தைக் களியாட்ட தினமாகவே கருதுகின்றனர்.

'மசாலவடை', 'தோசை' என்று 1965 ஆம் ஆண்டில் மேதின ஊர்வலத்தில் கோஷமெழுப்பிய இடதுசாரியினர் பேரினவாதிகளினால் ஒடுக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்காக கரிசனையுடன் மேதினத்தில் தீர்மானங்கள் எடுப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அப்படி எடுத்தாலும் அது கோஷமளவில் நின்றுவிடும்.

### யாழ்ப்பாணமும் மேதினமும்

கொழும்பில் கொண்டாட முடியாத மேதினத்தை இடதுசாரிகள் யாழ்ப்பாணத்தில் கொண்டாடிய காலமும் உண்டு. 1970 – 1977 வரை ஐக்கிய முன்னணி அரசிலிருந்த

**ஈ. ஆர். திருச்செல்வம்**

இடதுசாரிகள் கொழும்பில் அவர்களுக்கெதிரான அரசியற் சூழ்நிலை பாதகமாக இருந்ததால் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய மேதினத்தைக் கொண்டாடினார்கள். 1970 ஆண்டுப் பொதுத் தேர்தலின் பின் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கிய அரசியல் நிர்ணயசபையில் இடதுசாரிகளும் அங்கம் வகித்தனர். பழம்பெரும் இடதுசாரித் தலைவர் என்று கருதப்படும் ஒருவரிடமே புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக் காலப்பகுதியில் நடந்த மேதினங்களில் இடதுசாரிகள் எதைப் பிரகடனம் செய்தார்கள்? தமிழ் பேசும் மக்களுக்காகத் தப்புத் தாளம் போட்டார்கள்.

### இன்றைய நிலை

மலையகத் தமிழ் தொழிலாளர்கள் தமது உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள். வடக்கிலும், கிழக்கிலும் இனச் சகதியிலிருந்து மீளப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் காலகட்டம். இந் நிலையில் மே தினம் தொழிலாளர் கோரிக்கைகளோடு மாத்திரம் நில்லாமல், சமூக மாற்றத்தின் எழுச்சித் தினமாகவும், தேசிய விடுதலை இயக்கங்களைத் தட்டி எழுப்பும் தினமாகவும் பரிணமித்துள்ளது.

தமிழ் தேசிய இனத்தைப் பொறுத்தவரையில், மேதினம் எமது சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்துவதற்கான போராட்டம் இத்தினத்தில் சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளையும், அதன் ஏவலாளர்களையும் வெற்றி கொள்வதற்கு சர்வதேச பாட்டாளி வர்க்க நலனோடு பின்னிப்பிணைந்து, எமது விடுதலைக்கான போராட்டத்தை உலக அரங்கில் பலப்படுத்தும் ஓர் தினமாக இத்தினத்தை அனுஷ்டிப்பது வரலாற்றுக் கடமையாகும்.

# சகல தொழிலாளருக்கும் தொழிற்சங்கம் உண்டு ஆனால் கமக்காரருக்கு அப்படி ஒன்றும் இல்லை

## -கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர்

(கிளிநொச்சி)

எல்லாத் தொழில் செய்பவர்களுக்கும் தொழிற்சங்கம் உண்டு. கமத்தொழில் செய்பவர்களுக்கு மட்டும் அப்படி ஒரு தொழிற்சங்கமில்லை. இதை நிவர்த்தி செய்ய கமக்காரர்களின் பிரதிநிதிகள் தொழிற்சங்கங்களை அமைத்து, கமக்காரர்களுக்குக் கருத்தரங்குகளை நடாத்தி, கமத்தொழிலில் நவீன விஞ்ஞான யுகத்தில் ஏற்பட்டிருக்கும் புதிய செய்கை முறைகளைக் கற்பிக்க வேண்டும். கமக்காரருக்கு ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்த்து வைக்கவேண்டும்.

விவசாயத் தலைவர்களின் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து திரு. எஸ். சின்னத்துரை, நீர்ப்பாசனப்பொறியியலாளர் திரு. என். ஜே. நவரெத்தினராசா, கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ்.கே.ஐ. ராஜகோபாலன், யாழ். மாவட்ட பயிர்க் காப்புறுதிச் சபை உதவி பணிப்பாளர் திரு. எஸ். சிவகுரு, கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. பஞ்சலிங்கம் உட்பட மற்றும் விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. தனிநாயகம் ''விவசாய அபிவிருத்தியில் கமக்காரர் ...

பட்டது. இதனால் வேட்டையாடிய ஆண்களும் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

இந்த வளர்ச்சியின் நவீனத்துவமே இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சி வளர்ச்சி யுகமாகும் இந்த வளர்ச்சியின் காரணமாக தனி மனிதனோ, விவசாயியோ தனித்து நின்று செயற்படமுடியாது போயிற்று கூட்டு முயற்சி கூடுதலாகத் தேவைப்பட்டது. அது வெற்றியுமளித்தது.

இலங்கையைப் பொறுத்தவரை இது ஒரு விவசாய நாடு. நம் நாட்டின் முதுகெலும்பாகவுள்ளது விவசாயம். விவசாயத்தை அபிவிருத்தி செய்து, அதன் முழுப் பலனையும் அடைவதற்காக எமது அரசாங்கம் பல வழி

## ஊர்சுற்றி

**எழுதுவது**

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் மறைந்து பதினைந்துவருடங்களுக்குமேலாக இருக்கும். அவர்சென்றவாரம் தான் காலமானாரென்று அவரைமீண்டும்ஒருமுறை உயிர் துறக்க வைத்திருக்கிறது இலங்கை வானொலி. இதே தவறு சில பத்திரிகைகளிலும் வெளியாகி இருக்கின்றது.

கடந்த வாரம் காலமானவர் தமிழ்த்துறை ஆசான் மகாவித்துவான் ச. தண்டாயுதபாணிதேசிகர். தஞ்சைத் தமிழ்ப்பல் கலைக் கழகத்தில் தமிழ் துறைக்குத் தலைவராக இருந்தவர். தர்மபுரம் ஆதீனத்தில் இருந்து பல ஆராய்ச்சிகளைச் செய்து பல நூல்கள் வெளியிட்டவர்.

மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் இலங்கைக்கு இரண்டு மூன்று தடவைகள் வந்திருக்கிறார்.

1960 ஆம் ஆண்டுக்கு முன்னர் அதாவது சுமார் முப்பதாண்டுகளுக்குமுன்னர் கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் இவரது சொற்பொழிவுகள் இடம் பெற்றன. நகைச்சுவையாகவும்பேசுவார்.

பேராசிரியர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையும், ஆறுமுக நாவலரும் மடத்தில் தங்கியிருந்தாலும் இரு அறிஞர்களும் பல பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். இரவில் ஒருவர் வெளியேயும் மற்றவர் உள்ளேயும் படுத்துறங்க ஆயத்தமாயினர். ஒருவர் அடிக்கடி கொசுவுக்கு (நுளம்பு) அடித்துக் கொண்டிருந்தார். 'கொசுக்கடி கடுமையோ' என்று நாவலர் கேட்கவும் ''ஆமாம் கொசுக்கடி கடுமைதான்'' என்றாராம்பேராசிரியர். அதாவது கொசுவுக்கு (நுளம்புக்கு) அடி கடுமைதான்.

ச. தண்டபாணி தேசிகர் தமிழ்க்கடல். இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகரிசைக்கடல் எம். எம். தண்டபாணி தேசிகர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைத் துறைத் தலைவராகவும் இருந்தவர்.

சனிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து தபால் ரயிலில் பயணம் செய்

இந்திய இராணுவம் அவமானத்துடன் நாடு திரும்ப நேர்ந்ததையும் இந்திய அமைச்சர் குஜ்ரால் வெளிப்படையாகச் சொல்ல முடியாது. இதனால் இரத்தினச் சுருக்கமாக மறைமுகமாகக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

நாமும் அவரது நிலையைச் சுருக்கமாகச் சொன்னால் ''சட்டி சுட்டதடா, கை விட்டதடா'' என்பதுதான் இதன் பொருள்.

இந்திய அமைச்சரும் இந்திய அரசும் ஏன் இலங்கை அரசும்கூடக் கடந்தகால அனுபவங்களிலிருந்து 'பாடம் படித்து' உண்மை நிலையைத் ''தெளிந்து உணர்ந்து'' நடந்து கொள்ள முன்வந்துள்ள போதிலும் நம்மவர்கள் சிலர் இன்னும் நிலைமையைப் புரிந்து கொள்ளவில்லை; அல்லது புரிந்தும் புரியாதமாதிரி நடந்து மீண்டும் குட்டையைக் குழப்ப நினைக்கிறார்களோ தெரியவில்லை.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் இந்தியப்படை இங்கிருந்த போது அதனுடனும் றோ என்ற இந்திய உளவுப் பிரிவுடனும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தாரென்பதும் இவைகளிடமிருந்து பல உதவிகளைப் பெற்றாரென்பதும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையில் வேற்றுமைகளை ஏற்படுத்த முயன்றாரென்பதும் பகிரங்கமாக முஸ்லிம் மக்கள் மத்தியிலேயே தெரிவிக்கப்படுகின்ற குற்றச்சாட்டுக்கள்.

இப்பொழுது இந்திய இராணுவம் முற்றாக வெளியேறிச் சென்றுவிட்டது. இது கிழக்கிலிருந்து வெளியேறியசமயத்தில் தமிழ் - முஸ்லிம் மோதலை ஏற்படுத்தவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இந்தியப்படை இலங்கைக்கு வருவதற்குக் காரணமாக இருந்தவைகளில் ஒன்று கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அத்துலத்முதலி ஜே ஆர். அரசின் விசேஷ அதிரடிப்படை, ஊர்காவல் படைகளின் அட்டூழியங்களும் அவற்றின் பின்னணியில் நிகழ்ந்த தமிழ் முஸ்லிம் மோதல்களுமேயாகும்.

கிழக்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் இருந்து இந்தியப்படை விலகிச் செல்லும் சமயத்தில் மட்டக்களப்புப் பகுதியில் தமிழ்த் தேசிய இராணுவமும் தொடர்ந்து இந்தியப்படையின் பாதுகாப்பிலிருந்த குட்டிச்சாத்தான்களும் செய்த கொலை, கொள்ளைகள், வழிப்பறிகள் இன்றும் மக்கள் மனதில் நீங்காத அதிர்ச்சி நினைவுகளாக நிலைகொண்டுள்ளன.

இவைகளெல்லாம் ஜனாப் அஷ்ரப்புக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அவர் அச்சமயங்களில் கிழக்கு மாகாணப் பக்கமே தலைகாட்டவில்லை; இன்றும்கூட அங்கு போவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் ஜனாப் அஷ்ரப் வடக்கு கிழக்கு மாகாணம் அரசின் பிடியிலிருந்து விலகிச் சென்றுகொண்டிருக்கிறதென்றும் அங்கு பொலிஸ் நிலையங்கள் இல்லை என்று கூறுவதும் அவரைப் பொறுத்தவரை சரியானதே!

அதிரடிப்படைச் சம்பவங்களை விடுத்து கடந்த பெரிய வெள்ளிக்கிழமை இரவு மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் எப்படி நடந்து கொண்டார்களென்பதுகூட ஜனாப் அஷ்ரப்புக்குத் தெரியவில்லையே!

வடக்கு கிழக்கு அரசின் பிடியிலிருக்க வேண்டுமென்றால் மீண்டும் அங்கு அதிரடிப்படையும் பொலிசும் ஊர்காவல்படையும் அங்கு அனுப்பப்பட வேண்டுமென்று அஷ்ரப் கேட்கிறாரா?

கிழக்கில் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும் அவர் கூறுகிறார்.

வடக்கிலும் கிழக்கிலும் கடந்த சில வருடங்களின் பின் இவ்வருடம்தான் தமிழர்கள் புதுவருடத்தையும் இஸ்லாமியர்கள் ரம்ழான் விழாவையும் கிறிஸ்தவர்கள் ஈஸ்டர் திருநாளையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடி இருக்கிறார்கள்.

இவை மக்களுக்குத் தெரிந்தவை; ஜனாப் அஷ்ரப்புக்குத் தெரியாதவை!

பட்டிதொட்டிகளிலெல்லாம் மேதினத்தைக் கொண்டாடினார்கள். அமெரிக்காவில் தொழிலாளர் போராடி சட்டப்படி எட்டு மணித்தியால வேலையை வென்றெடுத்த தினமாக மட்டும் கருதாமல், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கான ஒரு பொதுப் பிரகடன நாளாகவே கொண்டாடப் படுகிறது.

இலங்கையிலும் காலம் காலமாக பிரதான நகரங்களில் மேதினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால், இலங்கையில் இதுவரை கால ஆட்சியிலிருந்த பேரினவாத அரசுகள் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மறுத்து வந்துள்ளன. இலங்கையில் பாட்டாளி வர்க்கத் தலைவர்களும், இடதுசாரிகளும் தொழிலாளி வர்க்கம் தமது நியாயமான உரிமையை வென்றெடுத்த நாளாகக் கொண்டாடும் போது, ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகளை முன்வைக்கத் தவறிவிட்டார்கள். ஒட்டுமொத்தமாக சர்வதேச தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமை பற்றியும், இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தினரின் உரிமைகளைப் பற்றியுமே மேடைகளில் கோஷித்து வந்தனர். மேதினம் இலங்கையில் ஒரு

# எல்லா தொழிலாளருக்கும் தொழிற்சங்கம் உண்டு ஆனால் கமக்காரருக்கு அப்படி ஒன்றும் இல்லை

## -கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர்

(கிளிநொச்சி)

எல்லாத் தொழில் செய்பவர்களுக்கும் தொழிற்சங்கம் உண்டு. கமத்தொழில் செய்பவர்களுக்கு மட்டும் அப்படி ஒரு தொழிற்சங்கமில்லை. இதை நிவர்த்தி செய்ய கமக்காரர்களின் பிரதிநிதிகள் தொழிற் சங்கங்களை அமைத்து, கமக்காரர்களுக்குக் கருத்தரங்குகளை நடாத்தி, கமத்தொழிலில் நவீன விஞ்ஞான யுகத்தில் ஏற்பட்டிருக்கும் புதிய செய்கை முறைகளைக் கற்பிக்க வேண்டும். கமக்காரருக்கு ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்த்து வைக்கவேண்டும்.

விவசாயத் தலைவர்களின் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. கு. வி. தனிநாயகம் மேற்கண்டவாறு கூறினார்,

மேற்படி பயிற்சிக் கருத்தரங்கு, இரணைமடு சேவைக் காலப் பயிற்சி நிலையத்தில், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் திரு. பி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். சின்னத்துரை, நீர்ப்பாசனப்பொறியியலாளர் திரு. என். ஜே. நவரெத்தினராசா, கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. எஸ்.கே.ஐ. ராஜகோபாலன், யாழ். மாவட்ட பயிர்க் காப்புறுதிச் சபை உதவி பணிப்பாளர் திரு. எஸ். சிவகுரு, கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. பஞ்சலிங்கம் உட்பட மற்றும் விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. தனிநாயகம் ''விவசாய அபிவிருத்தியில் கமக்காரர்களின் பங்கு'' என்னும் பொருள்பற்றித் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

நாடோடிகளாகத் திரிந்த மக்கள் கூட்டம் நிலையாக ஒவ்வொரு இடங்களிலும் இருக்கத் தலைப்பட்டனர்.

இதனால் பெண்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். ஆண்கள் வேட்டைக்குச் சென்றனர். படிப்படியாக விவசாயம் வளர்ச்சியடைந்து மரக்கலப்பை கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வேட்டையாடிய ஆண்களும் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

இந்த வளர்ச்சியின் நவீனத்துவமே இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சி வளர்ச்சி யுகமாகும் இந்த வளர்ச்சியின் காரணமாக தனி மனிதனோ, விவசாயியோ தனித்து நின்று செயற்படமுடியாதுபோயிற்று கூட்டு முயற்சி கூடுதலாகத் தேவைப்பட்டது. அது வெற்றியுமளித்தது.

இலங்கையைப் பொறுத்தவரை இது ஒரு விவசாய நாடு. நம் நாட்டின் முதுகெலும்பாகவுள்ளது விவசாயம். விவசாயத்தை அபிவிருத்தி செய்து, அதன் முழுப் பலனையும் அடைவதற்காக எமது அரசாங்கம் பல வழிகளிலும் கமக்காரர்களை ஊக்குவிக்கிறது.

காணியற்றவர்களுக்குக் காணி வழங்கி, நீர்ப்பாசன வசதிகளைச்செய்துகொடுத்து விவசாய இலாகா மூலம் விஞ்ஞான தொழில் நுட்பங்களைக் கிராம அடிமட்டத்திற்கு எடுத்துச் சென்று, கமநல சேவை திணைக்களங்கள் மூலம் விவசாயத்திற்குரிய உள்ளீடுகளைப் பெறுவதற்கு இலகுவாக்கியுள்ளது. அறுவடை காலத்தில் சந்தைப் படுத்துவதற்கு வசதியாகப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வதுடன், அவற்றைக் கொள்வனவும் செய்கிறது, இதைவிட வங்கிகள் மூலம் இலகு கடனைப் பெறவும் வசதி செய்து கொடுத்துள்ளது.

காணிகளெல்லாம் உயிரினங்களின் உணவுத் தேவைக்காக இறைவனால் படைக்கப்பட்ட தேசியச் சொத்தாகும். காணியில் பயிரைச் செய்யாது, தனது உரிமைக்காக வீணாகக் காணியை வைத்திருப்பது நாட்டுக்கும், மக்களுக்கும் செய்யும் பாரிய குற்றமாகும். ஆதலால் காணிக்கேற்ப பயிரினத்தைத் தெரிவு செய்து பயிர் செய்ய வேண்டும்.

''குதிரையைக் குளக்கரை வரை கொண்டு செல்ல முடியுமே தவிர, உண்ணீரைக் குடிக்க வைக்க முடியாது.'' அதுபோலவே எங்களால் கமக்காரர்களை ஊக்குவிக்கத்தான் முடியும். கமத்தை முறையாகச் செய்வது கமக்காரர்களின் பொறுப்பாகும் என்றார்.

# தட்டிக் கேட்க யாருமில்லையா?

ஆசிரியர்
''ஈழநாதம்''

அச்சுவேலியில் சிறு அளவில் கோழி வளர்க்கும் நான் எனது கோழிகளுக்கு நோய் தடுப்பு ஊசி போட எண்ணி, சிறுப்பிட்டியில் உள்ள அரச பணிமனையில் விசாரித்தபொழுது, அங்கிருந்த மிருக வைத்தியர் சொன்னார் 150 கோழிகள் என்றாலும் இருந்தால்தான் தமது தொழிலாளர் வீட்டுக்கு வருவார்கள் என்றும், எனது கோழிகள் 10 மாத்திரமே என்றபடியால், அவைகளை ஒரு சனிக்கிழமை காலை தமது பணிமனைக்கு கொண்டுவந்தால் தடுப்பூசி போட்டுவிடலாம் என்றார்.

அதன்படி, சனி 7.4.90 இல் 66 வயதுடைய நான் எனது 10 கோழிகளையும் சைக்கிளில் கட்டிக்கொண்டு, காலை 9.15 மணியளவில் சிறுப்பிட்டி பணிமனையைச் சென்றடைந்தேன். ஊசி போடுவிப்பதற்கு இன்னும் பலர் கோழிகளுடன் வந்திருந்தார்கள். குஞ்சுகளுக்கு விண்ணப்பித்தோரும் தபால் மூலம் அழைக்கப்பட்டு வந்து காத்திருந்தனர். இவர்கள் முதல்நாளும் (வெள்ளி) அழைக்கப்பட்டு ஏமாந்தவர்களாம். 10 மணியாகியும் ஊசி போடத் தொடங்காதபடியால், அங்கு பணிபுரியும் பெண்மணியிடம் நான் விசாரித்தபொழுது, தடுப்பூசி மருந்து எடுப்பதற்காக முதல் நாள் யாழ்ப்பாணம் போன உத்தியோகத்தர் இன்னும் வரவில்லை என்றார். இவர்தான் குஞ்சுகளும் கொண்டு வருவார் என்றும் சொன்னார்.

காத்திருந்து அலுத்தவர்கள் முணுமுணுத்துக்கொண்டு அங்கிருந்து போய்விட்டனர்.

## மக்கள் மடல்

காலை 11.30 மணியளவில், நான் அச்சுவேலியில் இருந்து வந்துள்ளதைக் கேட்டறிந்த ஒரு உத்தியோகத்தர், என்னை மேசைக்கழைத்து சொன்னார், ''ஐயா, செவ்வாய் 10.4.90 இல் அச்சுவேலியில் எமக்கு வேறும் ஒரு பணி உண்டு, அப்பொழுது உங்கள் கோழிகளுக்கும் ஊசி போட்டுவிடுவோம்; இப்போ நீங்கள் திரும்பிப் போங்கள். 10.4.90 இல் அயலிலுள்ள கோழிக்காரர்களையும் சேர்த்து வைத்திருங்கள்.'' என்று. இப்படிச் சொல்லி, எனது பெயர், முகவரியையும் பணிமனைப் புத்தகம் ஒன்றில் பதிந்துகொண்டார். எனவே, கோழிகளையும் கொண்டு நான் வீடு திரும்பினேன்.

அந்த உத்தியோகத்தர் சொன்னபடி அடுத்த செவ்வாய் 10.4.90 இல் நானும் அயலவர்களும் கோழிகளை ஆயத்தமாக வைத்துக் கொண்டு காத்திருந்தோம், ஆனால் ஊசி போடுகிறவர் வரவில்லை. எதிர்பாராத இடையூறு ஏதும் நேர்ந்திருக்கலாம்; அப்படி ஏற்பட்டிருந்தால் அடுத்த சில நாட்களுக்குள் அவர் வரக்கூடும்; அப்படியும் வரமுடியாவிட்டால், காரணத்தை தெரிவித்து ஒரு தபால் அட்டை யாவது வரும் என எதிர்பார்த்தேன். ஆனால் இன்று (21.4.90) வரை ஆளும் வரவில்லை, தபால் அட்டையும் வரவில்லை!

எனது விலாசத்தை தேடிப் பிடிக்க முடியவில்லை என்று எவரும் சொல்ல முடியாது; ஏனெனில் எனது வீடு அச்சுவேலி ரவுணுக்குள், பேருந்து நிலையத்துக்கு அண்மையில், ஒரு பிரதான வீதியில் உள்ளது; வீட்டின் இலக்கம் (32) கொட்டை எழுத்தில் மதிலில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

இதுதான் பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறும் ஊழியர் செய்யும் சேவையா? இதைத் தட்டிக்கேட்க யாருமில்லையா?

சி. சிவபாதசுந்தரம்
அச்சுவேலி

## முன்னணி

யாழ். கோட்டக்கல்வி மட்டத்திலான தமிழ்த்தின விழா போட்டிகளில் நாவற்குழி மகாவித்தியாலயம் அநேக நிகழ்ச்சிகளில் முன்னணி வகித்து வெற்றியீட்டியுள்ளது. (24)

இரவில் ஒருவர் வெளியேயும் மற்றவர் உள்ளேயும் படுத்துறங்க ஆயத்தமாயினர். ஒருவர் அடிக்கடி கொசுவுக்கு (நுளம்பு) அடித்துக் கொண்டிருந்தார். 'கொசுக்கடி கடுமையோ' என்று நாவலர் கேட்கவும் ''ஆமாம் கொசுக்கடி கடுமைதான்' என்றாராம்பேராசிரியர். அதாவது கொசுவுக்கு (நுளம்புக்கு) அடி கடுமைதான்.

ச. தண்டபாணி தேசிகர் தமிழ்க்கடல், இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகரிசைக்கடல் எம். எம். தண்டபாணி தேசிகர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைத் துறைத் தலைவராகவும் இருந்தவர்.

சனிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து தபால் ரயிலில் பயணம் செய்தேன். பயணம் செய்தேனென்று சொல்வதைவிட கோட்டை ரயில் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் வந்திறங்கும் பெரும்பான்மையான நேரமும் நான் கொக்குப்போல் ஒற்றைக் காலில் நின்று வந்தேன்என்றுசொல்வது தான் பொருந்தும்.

ஒற்றைக்காலில் நின்று தவம் செய்திருந்தால் கூடக்கடவுள் கண்விழித்துப் பார்த்துக் கருணை கூர்ந்திருப்பார் ரயிலில் எப்படியோ முண்டியடித்து ஆசனத்திலமர்ந்து கொண்டவர்கள் ஆசனத்தில் வேரோடி விட்டவர்கள் போல அசையவே மாட்டார்கள்.

குழந்தைகளுடன்வரும் தாய்மார்களுக்கு சிறிது நேரமாவது சிலர் நிபந்தனையுடன் தமது ஆசங்களை விட்டுக் கொடுக்கும் ஓரளவு நல்ல பண்பை சில காலத்துக்கு முன் பார்த்திருக்கிறேன். ஐ.பி.கே.எவ். வந்து போன தன் பயனோ என்னவோ அதையும்கூட இப்பொழுது காணவில்லை.

ரயில் பயணி ஒருவர் சொன்னயோசனைகள்:-

வீதிகளுக்கு மேலாக ரயில் பாதை மேம்பாலம் மாதிரி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் போடவேண்டும். மேல் நாடுகளிலுள்ளது போல மணிக்கு 250 மைல் வேகத்தில் இதில் ரயில் சேவை நடத்த வேண்டும்.

பஸ்களில் டபிள்டெக்கர் (மேல்தட்டு) இருப்பது போல் ரயில்களிலும் மேல்தட்டு இருக்க வேண்டும். (மேல்தட்டு ரயிலிருந்தாலும் மேல்தட்டுகளுக்காக அடிபட்டுக் கொள்வார்கள் என்று அவரே திருத்தத்தையும் சொன்னார்.)

ஈழநாதம்

# மட்டக்களப்பு மாநகரசபை பெரும்



# நிதி நெருக்கடியில் உள்ளது -

## மக்கள்வரிகளைச் செலுத்தாவிடில் பலசேவைகள் பாதிப்படையலா

- ஆணையாளர் கார்த்திகே

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபைக்குகிடைக்க வேண்டிய வரிப்பணம் சுமார் 82 இலட்சம் ரூபா நிலுவையாக இருப்பதால் சபை நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. இதனால் சபையின் பல்வேறு நடவடிக்கைகள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இத்தகவலை மாநகரசபை ஆணையாளர் திரு கே. கார்த்திகேசு அண்மையில் செய்தியாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

சபையின் தற்போதைய நிலை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

வரியிறுப்பாளர்களிடமிருந்து சோலை வரி - ரூபா 25 இலட்சம் மின் கட்டணம்- ரூபா 40 இலட்சம் தொழில் வரி - ரூபா 7இலட்சம் கச்சேரி முத்திரை வரி - ரூபா 9 இலட்சம் என நிலுவையாகவுள்ளது.

இ. மி. சபைக்கு 1 கோடி 20 இலட்சம் 42 ஆயிரம் செலுத்த வேண்டியுள்ளது. இது இருபதுமாத நிலுவையாகும். (1988 ஆகஸ்ட்முதல்)

இ. மி. ச. உடனடியாக 50 இலட்சம் செலுத்த வேண்டும். இல்லையேல் துண்டிப்பு என அறிவித்துள்ளது.

பொதுமக்கள் தமது வரிகளை செலுத்துவார்களானால் நிலைமையை ஓரளவு சமாளிக்க முடியும். கடந்தகால சூழ்நிலைகளை சாதகமாக பயன்படுத்தித்தான் வரிகளை செலுத்தவில்லை. தற்போதைய சூழ்நிலையில் வரிகளை செலுத்த வேண்டும் இல்லையேல் பல சேவைகள். பாதிக்கப்படும்.

1980 ஆம் ஆண்டு வங்கி நிரந்தர வைப்பிலிருந்து ரூபா 70 இலட்சம் கூட சாலியாகி விட்டது.

அண்மைக்கால சம்பவங்களின் எதிரொலியாக வருமானம் பெரும் வீழ்ச்சி காணப்பட்டது.

சட்டவிரோத மின்பாவனையினால் ரூபா 25 இலட்சம் நஷ்டம்.

மின்சாரசபைக்கு செலுத்த வேண்டிய கட்டணம் செலுத்தப்படாமல் ஏனைய தேவைகளுக்கு செலவு செய்யப்பட்டன.

1983 - 1989 வரையிலான காலப்பகுதியில் வாகனங்கள் இழப்பு உட்பட 25 இலட்சம் ரூபாவரை நஷ்டம் புனர்வாழ்வு அமைச்சிலிருந்து எவ்விதமான நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லை.

குப்பை அகற்றுவதற்… இரு உழவு இயந்திரம் … கைக்கு பெறப்பட்டு … ரூபா 18, 000 கட்… செலுத்தப்படுகிறது… சபை மாத வருமா… இலட்சம் எதிர்பார்க்கி… ஆனால் கிடைப்பது 9 இ… சம் ரூபாய் ஆகும்.

ஊழியர்கள் சம்பள… மாதம் 12 இலட்சம் தேவை… ஆனால்உள்ளூராட்சி இலாகா… வழங்குவது ரூபா 5 இலட்ச… ஆகும்.

சபையின் நிதி நிலை… மிக மோசமாகவே உள்ள… இதனைசமாளிக்கபுனர்… புனரமைப்பு நிதியி… கோரியுள்ளோம் என்றார்.

---

## நோய் பரவுகிறது

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் அண்மையில் பெய்த மழையினால் பலவித நோய்கள் பரவுகின்றன.

நீண்ட கால வரட்சியின் பின் பெய்த இம்மழையினால் வயிற்றோட்டம், வாந்திபேதி, காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுகின்றன. பெரும்பாலும் சிறு குழந்தைகளே இந்நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். (22

## விவசாய கழகங்கள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் உள்ள இளம் விவசாயிகளை கொண்டு வட்டார ரீதியாக விவசாயிகள் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாகவும் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற பல பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுமே இக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. (22)

## கும்பாபிஷேகம்

(கொழும்புத்துறை)

யாழ். கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ காலாக்கினி ருத்ர சமேத அருள்மிகு மகாமுத்துமாரி அம்பாள்ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மகாமுத்துமாரி அம்பாளுக்கும் சுற்றுப்பிரகார மூர்த்திகளாகிய விநாயகர் சுப்பிரமணியர் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் வைகாசி மாதம் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. (24)

## புலமைப்பரிசிலில் சித்தி

(அம்பாறை)

அட்டாளைச் சேனை வடக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை மாணவரான எம். எச். இர்சாத் அட்டாளைச்சேனை கொத்தணிப் பாடசாலைகளின் முதல் மாணவனாக 1989இல் நடைபெற்ற 5 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய

---

நெடுந்தீவு

## வெளியூர் மீனவர்கள் நடமாட்டத்தைக் குறையுங்கள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கடற்கரையோரத்திலிருந்து குறைந்தது ஐந்து மைல்களுக்கு அப்பால் வெளியூர் மீனவர்கள் தமது இழுவைப் படகுகளைக் கொண்டு மீன்களைப் பிடிக்கும்படி நெடுந்தீவு மீனவர் சங்கம் விநயமான வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளது.

வெளியூர் இழுவைப்படகுகள் நெடுந்தீவுக் கரையோரங்களில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால் நெடுந்தீவுகடற்றொழிலாலர்பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி இருந்தனர்.

அவர்களது வலைகள் சேதமடைவதும் காணாமற்போவதும் சகசமாகி இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்திய இழுவைப் படகுகளின் தொல்லைகள் விடுதலைப்புலிகளின் தலையீட்டினால் தற்பொழுது நீங்கியுள்ளமைகுறிப்பிடக்கூடியதாகும். (62)

## மீன்பிடி ஐஸ்தொழிற்சாலை ஊழியர் நிவாரணம்கோரல்

(சுதுமலை)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் ,கடற்தொழில் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கி வந்த ஐஸ்கட்டி பதனிடும் தொழிற்சாலை 1987 ஆம் ஆண்டில் இராணுவத்தின் தாக்குதல்களால் சேதமடைந்தது.

இதனைத் தொடர்ந்து இத்தொழிற்சாலை முற்றாக மூடப்பட்டது.

இங்கு வேலை செய்த 20 தொழிலாளர்களில் 16 பேர் மன்னார் பேசாலை ஆகிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்கள்.

ஆனால் மிகுதி நான்கு பேரும் தொழில் வாய்ப்பும் இன்றி ஊதியமும் இன்றி கஷ்டப்படுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் தமது பரிதாப நிலையைஉணர்ந்து தமக்கு நிவாரணம் பெற்றுத் தரவேண்டும் என்று பாதிக்கப்பட்ட இந்த ஊழியர்கள் கேட்கிறார்கள். (19)

## மின்சார ஒழுக்கைத்தடுத்த மின்சாரசபை ஊழியர்காயம்

(சுதுமலை)

அண்மையில் திருநெல்வேலி கிராம அலுவலகத்திற்கு பக்கத்திலுள்ள மின் உபநிலையத்தில் மின்வலு கூடியதன் காரணமாக அங்கிருந்து மின்சாரம் வெளிச்செல்லும் சில வயர்கள் எரியத்தொடங்கின.

இதனை அவதானித்த திரு கே. கருனாகரன் என்ற ஊழியர் உடனடியாக செயல்பட்டு மின் இணைப்பை நிறுத்தியதால் பல இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரம் வெடிக்காமல் பாதுகாக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் திரு கருணாகரனுக்கு சில எரிகாயங்கள் ஏற்பட்டுசிகிச்சை பெற்று வருகின்றார்.

சட்டவிரோத மின்பாவனையே இந்த சம்பவத்திற்கு காரணம் என்று மின்சார ஊழியர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த ஊழியர் தமது உயிரையும் பாராது இவ்வாறு செயற்பட்டதற்கு பொதுமக்களும்அதிகாரிகளும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

## ஆசிரியர்இடமாற்றசபையின் முதலாவது கூட்டம் மே5இல்

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் ஆசிரிய இடமாற்றச் சபையின் முதலாவது கூட்டம் மே மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை திருக்கோணமலையிலுள்ள மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை மா

## பழம் பெரும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றிய ஜனாப் அப்துல் அஸீஸ் மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறிப்பதற்கு டி. எஸ். சேனநாயகா 1949 ஆம் ஆண்டில் மசோதாக்களைக் கொண்டு வந்தபோது அதை எதிர்த்து இலங்கை

## திட்டமிடல் பகுதி

(முள்ளியவளை)

முல்லைத்தீவு கச்சேரிக்கு அருகில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத்தில்''ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டமிடல் பகுதி'' செயல் பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது.

அடுத்த வாரம் திட்டமிடல் சம்பந்தமான சகல பிரிவுகளும் இந்தப் பணிமனையில் இயங்கத் தொடங்கிவிடும் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பரந்தனில் மேதின ஊர்வலமும் கூட்டமும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழீழவிடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியால் நடாத்தப்படும் மே தினக் கூட்டம் நாளை மாலைபரந்தன்இளைஞர்வட்டமைதானத்தில் மேற்படி மக்கள்முன்னணி அமைப்பாளர் கோபி தலைமையில் நடைபெறும்.

மே தினக் கூட்டம் ஆரபமாவதற்கு முன் மாலை 3 மணியளவில் பரந்தன் இரசா… 4.30 மணியளவில் ஊர்வலம் கூட்ட மைதானத்தைச் சென்றடையும்.

இம் மாபெரும் ஊர்வலத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல தொழிற்சங்க உறுப்பினர்களும், பொது மக்களும் கலந்து கொள்வர்.

மேற்படி கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்டப் பொறுப்பாளர் சந்திரன் உட்பட சகல

மலையகத்தில்

## ஈழவர்ஜனநாயகமுன்னணியி… மேதின கூட்டமும் ஊர்வலமு…

(யாழ்ப்பாணம்

1948 பெப்பிரவரி 4-இல் இலங்கைப் பிரஜைகளாக கணிக்கப்பட்ட மலையகத் தமிழர்களுக்கு பொதுப் பிரகடனம்மூலம் பிரஜாஉரிமை வழங்க வேண்டும். மலையக தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கவேண்டும்.

தமிழ்பேசும் மக்கள… ஒட்டு மொத்த அர… தீர்வை ஏற்படுத்த வேண்… மலையக மக்களின் தனி… வம் பாதுகாக்கும் வகையில் புதிய நிர்வாகப் பிரிவுகளை… உருவாக்க வேண்டும்,

மலையக மக்களின் குடி… ருப்பு காணிகளையும் இரு… பிடங்களையும் சொந்தமாக்… வேண்டும்.

ஆகிய ஐந்து கோரிக்கை… களை முன்வைத்து மலை… கத்தில் மாபெரும் எழுச்… ஊர்வலமும் கூட்டமும் ஈ… வர் ஜனநாயக முன்னணியி… ரால் ஒழுங்கு செய்யப்பட்டு… ளது.

இந்நிகழ்ச்சிகள் அட்ட… நோர்வூட் விளையாட்டு மை… தானத்தில் மேதினத்தன்று… நடைபெறும். இக்கூட்டத்தில்… வட-கிழக்கு பாராளுமன்ற… உறுப்பினர்கள் பலர் உட்பட… மேலும் ஈழவர் ஜனநாயக… முன்னணி உறுப்பினர்களான… க. சின்னபாலா, கனகர… னம் ஆகியோர் உரையா…

ருத்ர சமேத அருள்மிகு மகாமுத்துமாரி அம்பாள்ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மகா முத்துமாரி அம்பாளுக்கும் சுற்றுப்பிரகார மூர்த்திகளாகிய விநாயகர் சுப்பிரமணியர் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் வைகாசி மாதம் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. (24)

## புலமைப்பரிசிலில் சித்தி

(அம்பாறை)

அட்டாளைச் சேனை வடக்கு அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை மாணவரான எம். எச். இர்சாத் அட்டாளைச்சேனை கொத்தணிப் பாடசாலைகளின் முதல் மாணவனாக 1989இல் நடைபெற்ற 5 ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இவர் அட்டாளைச்சேனை முதலாம் குறிச்சியைச்சேர்ந்த ஜனாப். எஸ். எம். ஹனிபா தம்பதிகளின் புதல்வராவார். (48)

## மீண்டும் மின் ஒளி

(புங்குடுதீவு)

நீண்ட காலமாக இருளில் மூழ்கிக் கிடந்த ஆலடிச்சந்திப் பகுதிதற்போது மின் விளக்குப் பொருத்தப்பட்டு இரவு நேரங்களில்ஒளிமயமாக காட்சியளிக்கின்றது.

இப் பகுதியில் வாழும் இளைஞர் யுவதிகளின் முயற்சியினால் பெறுமதிமிக்க மின் குமிழ் ஒன்று கடந்த சிலதினங்களுக்கு முன்னர் பொருத் தப்பட்ட பின்பே ஆலடிப் பகுதி ஒளிமயமாகக் காட்சியளிக்கின்றது. (22)

## புதியகட்டிட திறப்புவிழா

(வண்ணார்பண்ணை)

இதுவரை தற்காலிகமாக ஆடியபாத வீதியில் இயங்கி வந்த நல்லூர்உதவி அரசாங்க அதிபர் பணிமனை திருநெல்வேலி விவசாயப்பாடசாலைக்கு அருகிலமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படவுள்ளது. திங்கள் காலை 9.30 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கத்தினால் திறந்து வைக்கப்படவுள்ளது. இக்கட்டிடம் முன்னையநல்லூர்உதவி அரசாங்க அதிபர் க. சண்முகநாதனின் முயற்சியினால் இக்கட்டிடத்திற்கான அடிக்கல் முன்னர் நாட்டப்பட்டது. இவ்வைபவத்திற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இங்கு வேலை செய்த 20 தொழிலாளர்களில் 16 பேர் மன்னார் பேசாலை ஆகிய இடங்களுக்கு இட மாற்றம் செய்யப்பட்டார்கள்.

ஆனால் மிகுதி நான்கு பேரும் தொழில் வாய்ப்பும் இன்றி ஊதியமும் இன்றி கஷ்டப்படுகிறார்கள்.

சம்பந்தப்பட்ட கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் தமது பரிதாப நிலையைஉணர்ந்து தமக்கு நிவாரணம்பெற்றுத்

# ஆசிரியர்இடமாற்றசபையின் முதலாவது கூட்டம் மே5இல்

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சினால் ஏற்பாடு செய்யப்படும் ஆசிரிய இடமாற்றச் சபையின் முதலாவது கூட்டம் மே மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை திருக்கோணமலையிலுள்ள மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெறும். இதற்கான ஒழுங்குகளை மாகாண அமைச்சின் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா அவர்கள் மேற் கொண்டுள்ளார்.

இவ்விடமாற்றச் சபையில் ஆசிரிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்க உள்ளனர். வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆசிரிய தொகையின் 15% ஆசிரியர்களையாவது அங்கத்தவர்களாகக் கொண்ட ஆசிரியர் சங்கங்களுக்கு மாத்திரம் இடமாற்றச் சபையில் அங்கத்துவம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நிர்மாணத்தைப்--.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடும்.

நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்தவர்களின் வீடுகளை யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதிகளான வீடமைப்பு உத்தியோகத்தரும், வேலைப் பரிசோதகரும் பரீட்சித்து சிபார்சு செய்ததன் பின்னரே, இறுதிக் கொடுப்பனவினை வழங்கும் மேல் நடவடிக்கைகளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட அலுவலகம் மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது. (61)

### படைகளின்---

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

தனிப்பட்டோரிடமும் கடன் பெற்று வலைகள் வாங்கி அவர்கள் மீன் பிடித்து வருகின்றார்கள்.

எமது மீனவர்கள் சிங்களப் படையால் கொல்லப்பட்டார்கள். மீன் பிடிக்க தடை செய்யப்பட்டார்கள். இந்தியப் படையால் கொல்லப்பட்டார்கள் இன்று எமது சகோதர மீனவர்களால் தொல்லைக்குள்ளாகின்றார்கள்.

இன்று பல ஆண்டுகளுக்குப் பின் எமது மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்கின்றார்கள். அவர்களின் கடந்த கால கஷ்டங்களை தமிழ் நாட்டு மீனவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது மீனவர்களின் நிலைமையை புரிந்து தொடர்ந்து எமது மீனவர்களுக்கு எமது சகோதர தமிழக மீனவர்கள் தொல்லை கொடுக்காமல் இருக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டுக் ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

கிராம அலுவலகத்திற்கு பக்கத்திலுள்ள மின் உபநிலையத்தில் மின்வலு கூடியதன் காரணமாக அங்கிருந்து மின்சாரம் வெளிச்செல்லும் சில வயர்கள் எரியத்தொடங்கின.

இதனை அவதானித்த திரு கே. கருனாகரன் என்ற ஊழியர் உடனடியாக செயல்பட்டு மின் இணைப்பை நிறுத்தியதால் பல இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரம் வெடிக்காமல் பாதுகாக்கப்

### மதிய உணவு...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இந்த திட்டம் பரீட்சார்த்தமாக இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் அமுல் செய்யப்பட்டு வெற்றியளித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

### உயிரிழப்பு.:.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது.

மட்டக்களப்பு நகர இறப்பு பிறப்பு பதிவாளர் மூலம் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ்களில்தான் இக்குளறுபடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இயற்கை மரணம் தான் பயங்கரவாத சம்பவ மரணங்களாக திருத்தம் செய்யப்பட்டு புனர்வாழ்வு கிளையினருக்கு நஷ்டஈடுபெற விண்ணப்பம் செய்யப்பட்டது.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருந்த இறப்பு சான்றிதழ் பதிவாளர் அலுவலக பிரதியுடன் ஒப்பிட்டு பார்த்த போது தான் குளறுபடிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சம்பந்தப்பட்ட 236 இறப்பு சான்றிதழ்களுக்குரியவர்கள் தனித்தனியாக அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பதில் பதிவாளர் நீக்கப்பட்டுள்ளார் என்றார். (37)

னாகரனுக்கு சில எரிகாயங்கள் ஏற்பட்டுசிகிச்சை பெற்று வருகின்றார்.

சட்டவிரோத மின்பாவனையே இந்த சம்பவத்திற்கு காரணம் என்று மின்சார ஊழியர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த ஊழியர் தமது உயிரையும் பாராது இவ்வாறு செயற்பட்டதற்கு பொதுமக்களும்அதிகாரிகளும் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

### பழம் பெரும்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றிய ஜனாப் அப்துல் அஸீஸ் மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறிப்பதற்கு டி. எஸ். சேனநாயகா 1949 ஆம் ஆண்டில் மசோதாக்களைக் கொண்டு வந்தபோது அதை எதிர்த்து இலங்கை இந்தியக் காங்கிரஸ் நடத்திய மறியல், உண்ணாவிரதப் போராட்டங்களில் அப்துல் அஸீஸ் பெரும் பங்கு கொண்டிருந்தார்.

இலங்கை, இந்திய காங்கிரஸ் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர்பெற்று மாநாடு நடத்திய போது தலைவர் மற்றும் பதவிகளுக்கு நடைபெற்ற தேர்தல்களைத் தொடர்ந்து ஜனாப் அஸீஸ் அதிலிருந்து வெளியேறி ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸை ஆரம்பித்தார்.

திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் ஆட்சிக் காலத்தில் ஜனாப் அஸீஸ் நியமன எம். பியாகப் பதவி வகித்தார்.

ஜனாப் அஸீஸின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து ஜனாதிபதி பிரேமதாஸா மற்றும் தலைவர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

### இறந்த-.

( 1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இதுதவிர இராணுவ நடவடிக்கைகளினால் உடல் ஊனமுற்ற 3 பேருக்கு தலா 15 ஆயிரம் ரூபா 45 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டது

ஏனையோருக்கு நிவாரணங்களை விரைவில் வழங்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் உத்தரவிட்டுள்ளார்.

### விபத்தில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கணவன்-மனைவி சுப்பிரமணியம் கணேசலிங்கம் (வயது 36), கலாவதி சுப்பிரமணியம் (வயது 33) ஆகிய இருவருமே படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

டது.

அடுத்த வாரம் திட்டமிடல் சம்பந்தமான சகல பிரிவுகளும் இந்தப் பணிமனையில் இயங்கத் தொடங்கிவிடும் என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைப் பிரஜைகளாக கணிக்கப்பட்ட மலையகத் தமிழர்களுக்கு பொதுப் பிரகடனம்மூலம் பிரஜாஉரிமை வழங்க வேண்டும். மலையக தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கவேண்டும்.

# பரந்தனில் மேதின ஊர்வலமும் கூட்டமும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தமிழீழவிடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியால் நடாத்தப்படும் மே தினக் கூட்டம் நாளை மாலைபரந்தன்இளைஞர்வட்டமைதானத்தில் மேற்படி மக்கள்முன்னணி அமைப்பாளர் கோபி தலைமையில் நடைபெறும்.

மே தினக் கூட்டம் ஆரபம்மாவதற்கு முன் மாலை 3 மணியளவில் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன முன்றலில் இருந்து ஊர்வலம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு மாலை 4.30 மணியளவில் ஊர்வலம் கூட்ட மைதானத்தைச் சென்றடையும்.

இம் மாபெரும் ஊர்வலத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல தொழிற்சங்க உறுப்பினர்களும், பொது மக்களும் கலந்து கொள்வர்.

மேற்படி கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்டப் பொறுப்பாளர் சந்திரன் உட்பட சகல தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் உரையாற்றுவர். (த)

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால்

# அக்கரைப்பற்றில் நடத்தப்படும் மாபெரும் மேதினக் கூட்டம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை மேதினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

திருக்கோவில், தம்பிலுவில், மல்வித்தை, சம்மாந்துறை குடியேற்றக் கிராமங்கள் ஆகிய கிராமங்களில் இருந்து தொழிலாளர்களும், பொதுமக்களும் இணைந்து மாபெரும் ஊர்வலங்களை நடத்தவுள்ளனர். இவ் ஊர்வலங்கள் இக்கிராமங்களில் இருந்து அக்கரைப்பற்று நகரை வந்தடையும். அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இக்கூட்டத்திற்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் காஸ்ரோ தலைமை தாங்குவார். (48)

### ஒரிஸா---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர் ஆயுதங்களுடன் கைதாகியுள்ளனர்.

தமிழ் நாட்டுக்குத் தப்பி வரும் இப்போராளிக் குழுக்கள் கொள்ளைகளில் ஈடுபடுவதாகவும் தமிழ் நாட்டில் மோதல்கள் ஏற்படுவதுடன் அரசியல் சக்திகளுடன் சேர்ந்து தமிழ் நாட்டுக்கு பெருந்தலையிடி ஏற்படலாமென்றும் தமிழ் நாட்டு அரசு இப்பொழுது அஞ்சுகிறது. இதனால் எல்லைக் காவல் படையின் உதவியை இந்திய மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டு அரசு நாடுகின்றது.

### ஒரிஸா சென்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருபவர்கள் தாம் இலங்கையில் இருந்து தற்பொழுது தான் வந்துள்ளதாகக் கூறி அகதி முகாமுக்குள் செல்ல முற்பட்டுள்ளனர். ஆனால் அதிகாரிகள் இலங்கையில் இருந்து உடன வந்ததிற்கான ஆதாரங்களைக் கோருகின்றனர்.

இவ்வாறு வந்த 40 பேர் முகாமிற்குள் செல்ல முடியாமல் இராமேஸ்வரத்தில் உள்ள ஓர் சத்திரத்தில் தங்கியுள்ளனர். இவர்களுக்கு இராமகிருஷ்ண மிசன் உணவு வழங்கி ஆதரித்து வருகின்றது.

தீர்வை ஏற்படுத்த வேண... மலையக மக்களின் தனித்து... வம் பாதுகாக்கும் வகையில் புதிய நிர்வாகப் பிரிவுகளை... உருவாக்க வேண்டும்.

மலையக மக்களின் குடி... ருப்பு காணிகளையும் இரு... பிடங்களையும் சொந்தமாக்... வேண்டும்.

ஆகிய ஐந்து கோரிக்கை... களை முன்வைத்து மலை... கத்தில் மாபெரும் எழுச்... ஊர்வலமும் கூட்டமும் ஈ... வர் ஜனநாயக முன்னணியி... ரால் ஒழுங்கு செய்யப்பட்டு... ளது.

இந்நிகழ்ச்சிகள் அட்ட... நோர்வூட் விளையாட்டு மை... தானத்தில் மேதினத்தன்று... நடைபெறும். இக்கூட்டத்தில்... வட-கிழக்கு பாராளுமன்ற... உறுப்பினர்கள் பலர் உட்பட... மேலும் ஈழவர் ஜனநாயக... முன்னணி உறுப்பினர்களான... க. சின்னபாலா, கனகர... னம் ஆகியோர் உரையா... வர். (...

### மேதினத்தை ஒ...

### மதுபான சாலைகள்...

(கொழும்பு)

கொழும்பு நகரில்... மதுபானச் சாலைகள்,... னை நிலையங்கள் யாவும்... தினத்தையொட்டி 29ம் தி... யிலிருந்து அடுத்த மா... 2ஆம் திகதி காலை வ... மூடப்பட்டிருக்கும் என... சாங்கம் அறிவித்துள்ளது.

### ஆறாவது-:-

(1ம் பக்க தொடர்ச்சி)

நாயகம் திரு. வே. பாலகும... ரன் ஈடுபட்டுவருகிறார்.

இடது சாரிமக்கள் முன்... ணித்தலைவர் தினேஷ் கு... வர்த்தனாவையும் சந்தித்து... பேசிய பாலகுமாரன் அவரி... மிருந்து ஆறாவது திரு... த்தை நீக்குவதற்கும் சா... மான பதில்கிடைக்கவில்லை... என்று கூறியதாகத் தெ... கிறது.

எதிர்க்கட்சித் தலை... திருமதி சிறிமாவோபண்டா... நாயக்காவை விரைவில் திரு... பாலகுமாரன் சந்திப்ப... ரென்று எதிர்பார்க்கப்ப... கிறது.

## செய்தியில் உண்மையில்லை

திக்கம் வடிசாலை உற்பத்திகள் கடந்த மாதம் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன. அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா திறந்து வைப்பார் என்ற செய்தியில் எவ்வித உண்மையுமில்லை என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

க. நடராஜா
தலைவர்
பனை அபிவிருத்திச் சபை